உ

சிவமயம்



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும்

கனகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் கந்தையா செல்லையா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

14.07.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



சிங்கமாப்பாண முதலி வழியும்

நிற்சிங்க முதலி வழியில் பிறந்த

**சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும்**

**கனகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட**

# அமரர்

# கந்தையா செல்லையா

**அவர்களின் சிவபதப்பேறு குறித்த**

# நினைவு மலர்

**14.07.2005**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்





குடும்பத்தின் ஒளிச்சுடரே அன்பின்
பண்பின் உறைவிடமே இறைவன்
திருவடி சேர்ந்த எமது அன்புத்
தெய்வமே உமது புனித ஆத்மா
இறையடியில் பேரானந்த வாழ்வு பெற
கனகாம்பிகை அம்பாளை வேண்டி உமது
பாதார விந்தங்களை இம் மலரினால்
அர்ச்சித்து சமர்ப்பிக்கின்றோம்.



*இங்ஙனம்*
*மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தவத்திரு வடிவேல் சுவாமிகள்

அசத்தெல்லாம் சத்தாக அஞ்ஞான இருள்
ஞான ஒளியதாக கோரிய அழிவெனும் சக்தி
அமுதமாக அருள்வாய் அவனிக்கெல்லாம்
அமைதி! அமைதி! அமைதி!



ஸ்ரீமத் கணேசானந்த மகாதேவ சுவாமிகள்

# மகாதேவ ஆச்சிரமம்
# Mahadeva Ashram

Thavathiru Ganesanantha
Mahadeva Swamigal,
MAHADEVA ASHRAM,
Jeyanthinagar,
Kilinochchi (Sri Lanka).
Peoples Bank, Kilinochi A/C No: 13704.

தவத்திரு
கணேசானந்த மகாதேவ சுவாமிகள்,
மகாதேவ ஆச்சிரமம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
இலங்கை.


10-07-2005

அன்பும் ஆசியும் கிடைப்பதாக

## ஆசிச் செய்தி

கிளிநொச்சி கனகபுரம் பகுதி வாலிபர் முன்னேற்றத்திட்டத்தில் 1958ம் ஆண்டு நிலம் பெற்ற இல 03 எனும் காணியில் அரசாங்க உதவியோடு இல்லமைத்து மற்றும் விவசாயிகளுக்கு ஒரு எடுத்துக் காட்டாக நன்றுடைய வாழ்க்கையை வளம்படுத்தி

"இன்சொல்லால் அன்றி இருக்குமோ வியன் உலகம்"

என்ற குறள் வசனத்துக்கு அமைவாக திருவாளர் அமரர் கந்தையா செல்லையா அவர்கள் தன்னகத்தை பிறப்பிடமாகக் கொண்டு கனகபுரத்தை தமது [illegible] பின்னோடு வாழ்க்கைக்கு வதிவிடமாகக் கொண்டவர். உழவுத் தொழிலை கருத்தனமாகக் கொண்டு உணவுக் கொடுத்து உதவிய பெருமகன் இவர் சேவையை மறக்க முடியாது அவரது ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனை பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நன்றி.

ஸ்ரீ ஜோதி [illegible] மகாதேவ!

இறைபணியில் · [signature]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வையகத்தில்:
07.08.1937

வானகத்தில்:
14.06.2005

அமரர்

# கந்தையா செல்லையா

## திதி வெண்பா

பார்த்திப ஆண்டு வைகாசி முப்பத்தொன்றில்
சப்தமி திதியதனில் சப்த வாயுக்களடங்க
கன்தாம்பிகை அம்மாவே அம்மாவே என்றரற்றி
கழ்லடியில் கலந்திடவே சென்றான் செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைப் பாக்கள்



## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமுங் கொவ்வைச் செய்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையேயப்பா வொப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவாரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன்றனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையேயுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்த ருளுவதினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரவென் கண்கள் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமேயாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணனேயா
ஒப்பிலா மாமணி கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவேல் ஆயுதப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கந்தையா செல்லையா அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்துமா சமுத்திரத்தின் விலை மதிக்க முடியாத முத்தெனப் போற்றப்படும் இலங்கைத் தீவின் வடபகுதியில் அமைந்ததே யாழ்ப்பாணம் என்ற அழகிய நகரம். யாழ்ப்பாணம் என்றாலே தேன் சுவையூறும். அதன் வடபால் கலையும், கல்வியும், விளையாட்டும், விவசாயமும் வளம் பெற்றுத் திகழ்வதும் மா, பலா, வாழைகள் ஒருங்கே அமைந்த சோலைகளையும் தன்னகத்தே கொண்ட அழகிய திருநகர் தான் சுன்னாகம் எனும் பட்டணம். இதன் கிழக்குப் பகுதியில் அமைந்ததே மயிலப்பை என்ற அழகிய கிராமம்.

இக் கிராமத்தில் சிங்கமாப்பாண முதலி வம்சத்தில் வழிவந்த கந்தையா அவர்கட்கும் நிற்சிங்க முதலி வம்சத்தில் வழிவந்த செல்லாட்சிப்பிள்ளை அவர்கட்கும் (தம்பதியினர்) இளைய புத்திரனாக 07.08.1937ம் ஆண்டு பிறந்தார் அமரர் செல்லையா அவர்கள். இளவயதிலிருந்து துடிப்பும் துடியாட்டமும் மிக்கவராக விளங்கினார். இவரது மூன்றாவது வயதில் தந்தையார் இறந்து போகத் தாயாரினதும் தாய் மாமனின் (சின்ன உடையார்) வழிகாட்டுதலிலும் சகோதரர்களது அரவணைப்பிலும் வளர்ந்து வந்தார்.

குடும்பத்தில் கடைசி பிள்ளை என்றபடியால் மூத்த சகோதரர்கள் எல்லோரும் இவர் மேல் அளவுகடந்த அன்பை காட்டியதால் செல்லையா ஒரு செல்லப்பிள்ளையானார். தனது ஆரம்பக் கல்வியை மயிலிணிச் சைவ வித்தியாலயத்திலும், மிகுந்த அறிவாற்றல் கொண்டவராகையால் ஆங்கிலக் கல்வியை கற்பதன் பொருட்டும் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவராதயாக் கல்லூரியில் உயர் கல்வியை கற்றுத் தேறினார். இக் கல்லூரியில் கல்வி பயிலும் காலங்களில் விளையாட்டுத் துறையில் ஈடுபட்டு பல பரிசில்களை தனதாக்கிக் கொண்டார். கல்லூரியின் பல முக்கிய வைபவங்களில் முன்னின்று உழைப்பவராகவும் அதிபர், ஆசிரியர் தன்மதிப்பையும், பாராட்டுதல்களையும் பெற்று அவர்களின் அன்பைப் பெறக் கூடிய வகையில் மிகவும ஒழுக்க சீலராக விளங்கினார்.

காலம் சென்ற இராமசாமிப்பிள்ளை, காசிநாதர், சின்னத்துரை, அன்னபாக்கியம் ஆகியோர் அமரரின் சகோதரர்கள் ஆவார். இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரோடும் அன்புடனும் பற்றும் பாசத்தோடும் கருத்து வேறு பாடின்றியும் மிக நெருக்கமாக வாழ்ந்து வந்தார். அமரர் தாய்ப் பாசம் மிகுந்தவர். தாய் சொல்லை என்றைக்கும் தட்டமாட்டார். வாரம் தோறும் தாயாரின் இருப்பிடத்துக்கு சென்று வருவார். தாயார் சுகயீனமுற்று இருந்த போதும் பல சிரமங்களுக்கு மத்தியில் வேண்டிய சகல பரிகாரங் களையும் செய்து செய்ய வேண்டிய செலவீனங்களையும் செய்து வந்தார். இவர்களின் குல தெய்வமாக சுன்னாகம் ஐயனார் கோவிலும் பூதராயகர் கோவிலையும் வழிபட்டு வந்தார் அமரர்.

இந்த தருணத்தில் முன்னாள் யாழ்ப்பாண அரச அதிபர் அமரர் ஸ்ரீகாந்தா அவர்கள் வேண்டுகை விடுத்தார். செந்நெல் விளையும் பெருநிலப்பரப்பை தமதாக்கிய மருதம் என்பதற்கு இலக்கணமாய் அமைந்துள்ள கிளிநொச்சியில் படித்த வாலிபர் குடியேற்றத்திட்டத்தை உருவாக்க 1958ம் ஆண்டு விண்ணப்பம் கோரப்பட்டது. அமரர் நாட்டுப்பற்று மிக்கவராகவும், மொழி, இனப்பற்றாளனாகவும் இடது சாரிப் போக்கு உடையவராகையால் முதல் நபராக பெயர் கொடுத்துள்ளார். இவரது இச் செய்கையை மூத்த சகோதரர்கள் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் உயர்ந்த நோக்கோடு பச்சைப் பசேல் போல் பறவை, கிளி எனும் பச்சை நிறமுடைய கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள அழகிய கிராமம் கனகபுரத்திற்கு 1ம் பண்ணையை உருவாக்கி அடர்ந்த காட்டில் காட்டு வாழ்க்கை மிகுந்த கஸ்ரமும் சொல்லில் அடக்க முடியாத துயரமும் பயங்கரமும் ஒன்றான காலத்தில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த போது அவர்களுக்கென ஒரு பட்டப்பெயர் உருவானது. அவர்களின் செயற்பாட்டிற்கமைய அமரர் செல்லையாவிற்கு பிறதர் என்ற நாமத்தை தனதாக்கிக் கொண்டார். இவர்கள் தமக்கென இருப்பிடம், கிணறு போன்றவற்றை அமைத்து கோழிப்பண்ணையை உருவாக்கி பயிர்ச்செய்கையில் ஈடுபட ஆரம்பித் தார்கள். சிறுவயதிலிருந்தே பயிர்ச்செய்கையில் ஈடுபாடு உடையவர் என்பதால் அமரர் செல்லையா (பிறதர்) பயிர்ச்செய்கைக்கு பொறுப்பாக இருந்து எதுவித வசதிகளும் இல்லாமல் தங்களது முயற்சியின் நிமிர்த்தம் நல்லதோர் எடுத்துக்காட்டாக முன்னேறினார்கள்.

1962ம் ஆண்டு கூட்டு வாழ்க்கையில் இருந்து விடுபட்டு தனித் தனியே வாழ ஆரம்பித்தார்கள். அத்தருவாயில் அமரரின் சுயமுயற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக ஒப்பந்த வேலைகளை எடுத்து கிளிநொச்சி பகுதியில் பல குளங்களையும் பல பாதைகள் பல சிரமங்களின் மத்தியில் அமைத் துள்ளார். இவரது வேலைத்திறன்களை பொறியியலாளர்களும் பாராட்டி அமரரிடம் வேகம், விவேகம், தொழில் நுட்பம், மதிநுட்பம் , அன்பை பார்த்து மென்மேலும் பல வேலைகளை கொடுத்துள்ளார்கள். இக் காலத்தில் அமரரிடம் சில உழவு இயந்திரங்கள் பல இன மக்கள் இவருடன் இருந்து அமரர் ஓர் தொழிலதிபராக தொழிபார்த்து வந்துள்ளார். இத் தருணத்தில் நெற்செய்கையில் பெயர் போன இடம் கிளிநொச்சி அமரரும் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட ஆரம்பித்தார். தனது நெல்வயல் நிலமான ஒட்டன் குளத்திலும், கோணாவிலும் செய்தார். சிறு வெள்ளம் பெரு வெள்ளம் போல் விவசாயத்தில் இலாபம் கிடைக்கவே பல ஏக்கர் வயல் நிலங்களை விலைக்கும், குத்தகைக்கும் எடுத்து நெற்பயிர்ச் செய்கையில் முழுநேரத் தையும் கழிக்கலானார். இந்தக் காலகட்டத்தில் உறவுக்காரராகிய சுன்னாகத்தில் இருக்கும் தபால் அதிபர் அமரர் பொன்னம்பலம் ஐயாவும் துணைவியாரும் தமது வயல் நிலத்தை எந்தவித உடன்படிக்கையுமின்றி கொடுத்துள்ளார்கள்.அமரர் அதை தன் கண்ணை கண்ணிமை காப்பது போல் தவறாது காத்து வந்தார் கடைசி வரைக்கும்.

அமரரின் இருப்பிடமான கிளிநொச்சி நகரில் அமைந்த முருகன் கோவிலையும், கிருஷ்ணர் கோவிலையும் தனது குல தெய்வமான இரணைமடு கனகாம்பிகை அம்மன் கோயிலையும் வழிபட்டு வந்துள்ளார். தனது வாழ்க்கையில் இன்ப துன்பமான வேளைகளில் அம்மாளிடம் சென்று தரிசித்து தனது செயல் கருமங்களை அம்பாளின் ஆசீர்வாதத் துடன் செய்து வந்தார். அதன் காரணமாக சொந்தமாக வீடுகள் கட்டி விவசாயத் தேவைக்கேற்ற உழவு இயந்திரம் போன்ற அனைத்தையும் பெற்றிருந்தார். இந்த இயந்திரங்களை தனக்கு மட்டுமல்ல வசதிகுறைந்த மற்றவர்களுக்கும் கொடுத்து உதவி வந்துள்ளார். பொருட்களுடன் பண உதவியும் புரிந்து அவர்களின் வரண்ட வாழ்க்கையை வளப்படுத்தி வழி காட்டியாக விளங்கினார். ஏழை பணக்காரன் என்றோ தாழ்ந்தவர் உயர்ந்தவர் என்றோ பேதம் காட்டாது எல்லோரையும் தனது உற்றார் உறவினர்களாகளாகவும் உடன் பிறவாச் சகோதரர்களாகவும் அன்போடும் பண்போடும் இன் முகத்தோடும் புன்னகையோடும் வரவேற்று அரவ ணைத்து உபசரிப்பதால் செல்லையா என்று அழைக்க விரும்பாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் பிறதர் (*Brother*) அதாவது சகோதரன் என்றே அர்த்தப்பட அன்போடு அழைக்கலாயினர். சிறியோர், பெரியோர் அனைவருக்கும் அமரர் செல்லையா பிறதர் ஆனார்.

இவரது தளராத முயற்சிக்கும், அயராத உழைப்பிற்கும் பக்க துணையாக ஓர் இல்லாள் தேவையென இறைவனோடு இயற்கைகளும் விரும்பியதால் மாதகலைப் பிறப்பிடமாகவும், வதிவிடாகவும் கொண்ட அமரர் வினாசித்தம்பி இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகள் பிரணவசோதி (சொரூபி) என்பவரை 12.12.1971ம் ஆண்டு திருமணம் செய்து இல்லறத்தை நல்லறமாக கழித்து வந்தனர். இவர்களின் இனிய இல்லறத்தின் பெறுபேறாக கோணேஸ்வரன், கோகிலேஸ்வரன், தவனேஸ்வரன் என்ற மூன்று முத்தான ஆண்களையும், செல்வநாயகி, தவநாயகி, இராஜநாயகி எனும் மூன்று பெண் பிள்ளைகளையும் பெற்றெடுத்தனர். அமரரின் தாயார் இருக்கும் போது பேரப்பிள்ளைகளை பார்க்க வேண்டும் என்ற நேர்த்திக்கடனாக திருகோணமலையில் உள்ள கோணேஸ்வரர் கோவில் அருகில் காளியம்மன் கோவிலில் கௌரி விரத காப்பு வருடா வருடம் எடுத்து வந்துள்ளார். இதன் நிமிர்த்தம் மூத்த மகனுக்கு திருகோணமலை கோயில் ஞாபகார்த்தமாக கோணேஸ்வரன் என்ற நாமத்துடனும் மூத்த மகள் பிறந்த காலம் தாயார் அமரர் ஆகியதால் தாயாரின் நாமத்தில் செல்வநாயகி என்ற பெயரைச் சூட்டி அழைக்கலாயினர். பிள்ளைகளுக்கு கல்வி, ஒழுக்கம், பண்புகளை கற்பித்து திருமண வயதில் இவர்களுள் கோணேஸ்வரனுக்கு உதயணி என்ற பெண்ணை திருமணம் செய்து வைத்து கபிலாஸ், சோபிகா, தோசிகா ஆகியோருடன் ஜேர்மனியிலும், செல்வநாயகி தாய்வழி உறவுக்காரராகிய இரவிச்சந்திரனை திருமணம் செய்து சுபத்திரா, சோதீசன் ஆகியோருடன் கிளிநொச்சியிலும், தவநாயகி அமரரின் சகோதரியின் மூத்த மகன் விஜயகுமாரை திருமணம் செய்து அதீஸ், அபிஷா ஆகியோருடன் சுவிட்லாந்திலும், கோகிலேஸ்வரன் அமரரின் மனைவி அண்ணனின் மூத்த மகள் தீபலட்சுமி (சத்தியா)வை திருமணம் செய்து கிளிநொச்சியிலும் தவனேஸ்வரன் பிரான்சிலும், இராஜநாயகி தாய் வழி உறவினரான மகாயுவராஜ் (யுவா) வை திருமணம் செய்து திலக்ஸன் ஆகியோருடன் பிரான்சிலும் அனைவரும் செல்வம் செழிப்போடு வாழ்ந்து வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1996ம் ஆண்டு இடம் பெற்ற இடம் பெயர்வு காரணமாக இருப்பிடத்தை விட்டு அமரரின் குடும்பம் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அக்காலத்தில் பல கஸ்ரங்கள் இடர்பாடுகளுக்கு மத்தியில் நான்கு வருடத்தின் பின் தனது இருப்பிடத்தை வந்தடைந்தார்கள். வீடு சொத்துக்கள் அனைத்தையும் இழக்க நேரிட்டதை எண்ணி கவலையடைந்தார். அமரரின் நீண்டகால நேர்த்திக்கடனை 2001ம் ஆண்டு இந்தியா தலயாத்திரையாக சென்று திருச்சி உச்சிப்பிள்ளையார், ஸ்ரீரங்கம், போன்ற பெரும் கோவில்கள் சென்று திரும்பி வெங்கடேசப் பெருமாளிடம் சென்று நேர்த்திகளை நிறைவு செய்து அமரரின் செல்லப் பிள்ளையான இளைய மகளையும் திருமண பதிவு மூலம் பிரான்சிற்கும் வழியனுப்பி வைத்து தனது இருப்பிடத்திற்கு 2002ம் ஆண்டு வந்தார். கோயில் புனர்நிர்மாணங்கள், கட்டிடங்களுக்கு நிதியும் கொடுத்துள்ளார். மற்றும் சமூகத்தில் பொது நிகழ்வுகளுக்கு வைபவங்களுக்கும் வேண்டிய பங்களிப்பைச் செய்து வந்துள்ளார். அமரர் இறுதிக் காலம் வரை கிளிநொச்சி நகரைச் சுற்றி உலா வருவது வழமை . இவரின் உடல் நிலமை பாதிக்கப்பட்டு பல நோய்களால் தாக்கப்பட்டு காலன் அவர் மேல் குறி வைத்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இங்கிருந்து வடமுனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைக்காக தென்திசை தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சில நாட்கள் கடந்து 14.06.2005ல் இறைபதம் அடைந்தார். தனது 68 வது அகவையில் அமரரின் இழப்பு குடும்பத்திற்கு பேர் அதிர்ச்சியை கொடுத்தது. சடங்குகள் யாவும் அமரரின் இல்லத்தில் நடைபெற்றன. மரணச் செய்தியை கேள்வியுற்ற உற்றார் உறவினர்கள் மட்டுமல்ல நண்பர்களும் வருகை தர முடியாதவர்கள் தொலைநகல் மூலமும், தோலைபேசி மூலமும் அறிவித்து தங்கள் துயரத்தை பகிர்ந்து கொண்டனர். பலர் மாலைகள் சாற்றியும், மலர்தூவியும் அஞ்சலி செய்தனர். அமரரின் இழப்பை எவராலும் நிரம்ப முடியாது அமரரைப் போன்று பெரியாரை காண்பது அரிது.

'நெருநெல் உளளொருவன் இன்றில்லை என்றும்
பெருமை உடைத்து இவ்வுலகு' (குறள்)

அமரர் கூறுவது 1. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது
2. செய்வன திருந்தச் செய்
3.சொல்லியும் செய்யார் கயவர். சொல்லிச் செய்வார், சிறியோர். சொல்லாமல் செய்வார் பெரியோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

அன்புடைய நாயகரே உம்மை இன்று
அகிலமதில் இழந்திட்டேன் ஆற்று வேனோ
என்புருகி மனம்பதைத்து இங்கு நானும்
ஏழையாய் அழுதிடற்கு என்செய் தேனோ
பண்புடனே எனைக்காத்துக் கதைகள் கூறிப்
பக்கத்தே செல்லாது வாழ வைத்தீர்
துன்புடனே நானிருந்து வாடு தற்குத்
தூயவரே என்னபிழை செய்தே னையா.

உங்களது உடுப்புகளைக் கண்ட போது
ஓவென்று கதறியழு தரற்று கின்றேன்
மங்களமாய் நாம்வாழ்ந்த நாளை எண்ணி
மனமதுதான் துடிக்கிறது என்ன செய்வேன்
எங்களது பிள்ளைகளின் வாழ்வைக் கண்டு
இன்பமுடன் இருந்தோமே எந்தன் ஐயா
திங்களது இல்லாத வானம் போலச்
செகமீது எமதில்லம் தோன்று தையோ.

## பிள்ளைகளின் தவிப்பு

வெற்று வளர்த்து வெயருமிட்டு பேரன்போடு பேணிக்காத்து பட்டுடை கள் நற்கனிகள் பாலும் சோறும் தொட்டழைந்து சிந்தியதற்கெல்லை உண்டோ? கற்று அறிவூட்டி நாமுயர காலமெல்லாம் பாடுபட்ட எங்கள் அப்பாவே கட்டியுங்கள் உடல் மீது புரண்டபோதும் கண்ணதனை மூடி எங்கே சென்றீர்கள்?.

மட்டில்லா துயரங்கொண்டோம் மாயவனே உன் மாளிகையில் அப்பாவை இருத்திக்கொள்ளாயோ? ஆரிருந்தென்ன எமக்கு நீ இல்லையே அப்பா? ஆ விழுந்து அலறியழும் கன்று போல் துயரில் உனைப் பிரிந்து வேதனையில் வாடி சோகம் எனும் பெரும் கடலில் மூழ்கலாச்சே அப்பா அப்பாவே அப்பா எங்கு சென்றீர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

மக்களை மணந்தவெம்மை மக்களாய் பேணி
மதிப்புயர் மாமாவே மாண்புயர் தெய்வமே
திக்குகள் யாவிலும் தேடியே வாடுகின்றோம்
தூயநல் லாளரே எங்குதான் சென்றீர்
உத்தமனாகவே உலகினில் மிளிர்ந்த
உயரிய தெய்வமே உமையினிக் காண்போமா
எப்போதும் எங்கள் இதயத்தில் வாழும்
எம்முயிர் மாமாவே எங்கு நீர் சென்றீர்.

## பேரப்பிள்ளைகள் குமுறல்

அப்பப்பா, அம்மப்பா வென்று அன்போடு அழைத்திட
இப்பாரில் இனியார் உளரோ எமக்கு
எப்போதும் எம்மை இனிதாக அணைக்கும்
எம்முயிர்த் தாத்தாவே எம்குல விளக்கே
பொங்கிடும் துயரினால் வாடிடும் எங்களுக்கு
புவியினில் ஆறுதல் அளித்திட வாரீரோ
மங்கிடா விளக்கேமதிப்புயர் மணியே
மண்ணிலே இனியும்மை காண்பது தானெப்போ!

## உற்றார் உறவினர் புலம்பல்

மற்றவர் மனம் நோகா வாழுகின்ற மனிதரென்போம்
மதிப்புடனே யாவரையும் மகிழ்விக்கும் தெய்வமென்போம்
துதிக்கின்றோ மென்றும் தூயவும் உள்ளமதை
புவிதன்னில் உங்கள் புனித முகங் காண்பதெப்போ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தாத்தா எங்கு சென்றீங்கள்

தாத்தா நீங்கள் எங்கு சென்றீர்கள்?. உங்களைக் காணாமல் நாங்கள் ஒரு போதும் இருந்ததில்லை. நீங்கள் பிறந்தது தொட்டு உங்களின் இறுதி வரை தாத்தா நாங்கள் இருவரும் தான் உங்களுடன் இருந்த பாக்கியம் கிடைத்தது.

எத்தனை பேரப்பிள்ளைகள் இருந்த போதிலும் எங்கள் இருவருக் கும் தான் உங்களின் கைகளில் பேரப்பிள்ளைகள் என்று கொஞ்சி விளையாடியாடு உங்கள் அரவணைப்புக் கிடைத்தது. இந்த பாசம் இருந்தபடியால் தானா எமது அம்மாவும், நாங்கள் இருவரும் முதன் முறையாக இரவோடு இரவாக கொழும்பு வந்து நீங்கள் சுயநினைவுடன் இருக்கும் போதே பார்த்தது. இது தாத்தா இல்லை வேறு யாரோ என்று பயந்து போனது எங்களின் கைகளை இறுகப் பற்றி பிடித்தது. அந்தக் கைகளில் நீங்கள் தவண்டதால் தான் அந்த பாசத்தில் தழுவினீர்கள். உங்களுக்கு தெரிந்து விட்டதா தாத்தா. எங்களை விட்டு செல்லப் போகின்றீங்கள் என்று அதனால் தான் கடைசியிலும் எங்களைப் பார்க்கக் காத்து இருந்த மாதிரி. அது தான் நீங்கள் கடைசியாகச் சுயநினைவில் இருந்தது அந்த சந்திப்புத் தான் கடைசி.

தாத்தா! நீங்கள் சுகமாகி வீடு திரும்புவீங்கள் என்ற நினைவுடன் தான் இருந்தோம். ஆனால் இந்தக் கோலத்தில் வருவீர்கள் என்று நினைக்கவில்லை. கடைசியாக வீட்டில் இருக்கும் போது தான் தாத்தா நான் உங்களுக்கு சாப்பாடு கொண்டு வந்து தரும் பாக்கியம் கிடைத்தது. எனது செல்ல மொழியால் நான் உங்களைச் சாப்பிடுங்கோ என்று பேசுவேன். தாத்தா நீங்கள் என்னைச் சுபத்திரா, சுபத்திரா என்று கூப்பிடும் குரல் தான் கேட்கதா என்று ஏங்குகின்றேன். சோதீசன் சோதீசன் என்று எனது தம்பியைக் கூப்பிடும் முதலே எனது அம்மா பேசப் பேச உங்களிடம் வந்து விடுவான்.

எங்கள் இருவருக்கும் தான் உரிமையுடனும் உறவாடவும் தாத்தா என்று சொல்வதற்கும் ஒருவருக்கும் கிடைக்காத அரும் பெரும் பாக்கியம் கிடைத்ததையும் நாங்கள் உங்கள் நினைவுகளுடன் கலந்து கொள்கிறோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஓம் ஶ்ரீ ராம ஜெயம்

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**
**உங்கள் பேரப்பிள்ளைகள்**
**செல்வி.ரவிச்சந்திரன் சுபத்திரா**
**செல்வன் ரவிச்சந்திரன் சோதீசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அருமை சகோதரனே!

"உன் நினைவுகள் என் நெஞ்சில் நீண்டு கொண்டே போகின்றன நிம்மதி இன்றி மனசு நீந்துகின்றது. தண்ணீரில் இல்லை கண்ணீரால் தான்

எனது தம்பி செல்லையாவின் மறைவால் தாங்க முடியாத துயர் அடைக்கின்றேன். எமது கடமைகளை முன் நின்று செய்ய வேண்டியவர் எங்களுக்கு முன்னே சென்று விட்டார் என்ன செய்வது?

எமது தந்தையார் இறக்கும் போது எமது தாயார் பாரினிலே பாலர்களை விட்டு எங்கு நீ சென்றாய் எனப் பரிதவித்துத் கதறி அழுத போது எனது தம்பி செல்லையாவின் வயது மூன்று. எமது தந்தையின் மரணச்சடங்கிற்கு வந்தவர்கள் எமது தந்தையின் நிலை கண்டு கதறவில்லை தம்பி செல்லையா பால் முகம் மாறாத பாலகனாய் அவன் அழுத காட்சி கண்டே பதறினர்.

அறிவும், அழகும், அடக்கமும், ஒழுக்கமுடையவனாக அவன் வளர்ந்து வந்த காலம் எமது குடும்பத்தின் வசந்த காலமே. எமது தாயார் செல்லா, செல்லா என அழைத்து செல்லப்பிள்ளையாகவே வளர்த்து வந்தார் நாங்கள் ஒரு விவசாயக் குடும்பமாக இருந்தமையால் புன்னாலைக்கட்டுவனில் வசித்து வந்த எமது தாய்மாமனாரின் சொற்கேட்டு அவரின் வழிகாட்டலிலும் அரவணைப்பிலும் ஊக்கத்திலும் முன் நின்று உழைத்து முன்னேறி வாழ்ந்து வந்தோம்.

இவர் ஆரம்ப கல்வியை சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தி யாலயத்திலும் ஐந்தாம் வகுப்பின் பின் ஸ்கந்தவரோதயா கல்லூரியிலும் கற்று வந்த காலத்தில் பன்னிரண்டு வயதில் பாடசாலைக்கு நடந்து போக வேண்டாம் எனக் கூறி சைக்கிள் வாங்கி கொடுத்தேன். நன்றாகப் படிக்க வேண்டும் என ஆசை கொண்டேன். ஆனால் பத்தாம் வகுப்பில் கற்றுக் கொண்டிருந்த வேளை படித்த வாலிபர் திட்டத்தில் அரச அதிபர் சிறிகாந்தாவின் வேண்டுகோளுக்கு அமைய முதல் முதலாக கிளிநொச்சிக்கு சென்ற வாலிபர் குழுவில் தம்பி செல்லையாவும் ஒருவர் இக் குழுவில் சென்ற அனைவருக்கும் துணைப் பெயர் சூட்டப்பட்டது. "பிறதர் என்ற துணைப் பெயருடன் எல்லோரிடமும் சகோதரத்துவ மாகவே வாழ்ந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் கிளிநொச்சிக்குச் சென்ற காலத்தில் எதுவித வசதிகளும் இருக்க வில்லை, உறங்குவதற்கு இடமில்லை, உண்பதற்கு உணவில்லை, குடிப்பதற்கு நீருமில்லை இவர்கள் பட்ட வேதனைகளும் கஸ்டங்களும் சொல்லியடங்கா. அன்றைய கிளிநொச்சியுடன் ஒப்பிடும் போது இன்றைய நவீனமயமான கிளிநொச்சியாக முன்னேறியிருப்பதற்கு முதல் முன்னோடிகள் அவர்களே தான்.

எனது தம்பியைக் கிளிநொச்சிக்கு சென்று அடிக்கடி பார்த்து வருவேன். அவரும் சுன்னாகம் வந்து என்னையும் எனது சகோதரர்களையும் பார்த்துச் செல்வார். இப்பொழுது சில ஆண்டுகளாக நாட்டு நிலைமை காரணமாகவும் எமது வயது காரணமாகவும் பிரயாணங்கள் செய்வதற்கு சிரமமாக இருந்தது. இரண்டு கிழமைக்கு முன்னரும் சுன்னாகம் சந்தையில் என்னை வந்து பார்த்து கதைத்துவிட்டுச் சென்றார்.

தம்பி செல்லையாவும் அவரது மனைவியும் வீடுதேடி சென்றவர் களை முகச்சலிப்பின்றி வரவேற்பதிலும் விருந்தோம்பலிலும், உதவி செய்வதிலும் முன்நின்று செயற்படுவார்கள். சுகயீனமுற்று சில நாட்க ளாக வாய்திறந்து எதுவுமே சொல்லமுடியாமலும், உண்ண முடியாமலும் இருந்த போது அவரின் மனைவியும் இரண்டாவது மகனும் இரவு பகல் பாராமல் தமது கடமையைச் செய்தமையிட்டு பெருமையடை கின்றேன்.

" என் மைந்தர்கள் வரா விட்டால் என் கடமை நீ செய்வாய் என்று அன்று சொன்னாய் ஆனால் இன்று உன் சடங்கை நான் பார்க்க ஆண்டவனே நிர்ணயித் தான் இன்று நான் பட்டமரம் போல் நிற்கின்றேன். மறு படியும் துளிர்ப்பேனா? உன் ஆத்மா சாந்தியடைய எமது குலதெய்வம் சிவபூதவராஜரையும் உன் கனவுக்கன்னி கனகாம்பிகை அம்மனையும் வேண்டிச் சமர்ப்பிக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி

நன்றி

**சுன்னாகம் கிழக்கு**
**சுன்னாகம்**

**கந்தையா - காசிநாதர்**
**பெரியண்ணா குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன அண்ணாவின் உள்ளக்குமுறல்

ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டாயே?
ஏன் இந்தக் காலன் பறிப்பு ஏன் இந்த சோகம் எமக்கு?
அண்ணா என அன்பாக அழைத்தாயே! இனி எங்கே
இந்தக் குரல் காண்போம், இனி எங்கே என தம்பியைத் தேடுவோம்
ஏன் இந்த திடிர் பிரிவு எம் கண்களில் கண்ணீரையும்
நெஞ்சினில் சோகத்தையும் தந்துவிட்டு
நீ மௌனமாகியது ஏனோ?
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

எமக்கு நல்வழி காட்டியாய்
நாம் என்றும் ஒற்றுமையாய் இருந்திடுவோம்
எனப் பல தடவை கூறிடுவீர்
தங்கள் குடும்பத்தை சிறப்பாக நடத்தி வந்தீர்
யாழ் ஊரில் நாமிருந்து வந்தவுடன்
அகமகிழ்ந்து அழைத்து ஒரு சேர இருந்து
உண்டு களித்து இன்புற்று இருந்தோம்
இன்று நீங்கள் இல்லை தவிக்கின்றோம்

உங்கள் ஆத்மா இறைவனடி சேர பிரார்த்திக்கின்றோம்.

**சுன்னாகம் கிழக்கு,**
**சுன்னாகம்.**

**கந்தையா சின்னத்துரை**
**சின்னண்ணை குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் தம்பி எங்கே?

"எப்போதாவது உன்னைச் சந்திப்பதும், எப்போதுமே உன்னை சிந்திப்பதும் எனது வழக்கமாயின.

எனது ஒவ்வொரு நாளும் உன் நினைவுகளோடு விடிந்து எனது ஒவ்வொரு இரவும் உன்கனவுகளோடு முடிந்தன"

நான் செய்த புண்ணியமே தம்பி செல்லையா எனக்குச் சகோதரராகக் கிடைத்தது. என்னை அக்கா, அக்கா என்று அழைப்பார். என் மீதும் எனது குடும்பத்தின் மீதும் அளவுகடந்த அன்பு கொண்டவர் அவரின் மறைவால் தாங்க முடியாத வேதனை அடைகின்றேன்.

கிளிநொச்சிக்கு எனது தம்பியைப் பார்ப்பதற்காக அடிக்கடி போவேன். இனி யாரிடம் செல்வேன்? கிளிநொச்சி மாவட்டத்தில் "பிறதர் செல்லையா" என்றால் தெரியாதவர்கள் யாருமே இல்லை. என் தம்பி எம்மை பெருமைப்பட வைத்தாரே தவிர சிறுமைப்பட வைக்கவில்லை.

உன்னைத் தேடி ஓடிடே வந்த போதெல்லாம் அள்ளி அள்ளித் தந்தாயே என்ன வேணும்? என்ன வேணும்? என்று கேட்பாயே, இனி என்னை யார் கேட்பார். தனது குடும்பம் என்ற அளவில் மட்டும் வாழாது சகோதரர்கள், உறவினர்கள் நண்பர்களினது முன்னேற்றத்திற்கும் முன் நின்று உதவி செய்து மகிழ்ச்சியடைந்தவர்.

பதினெட்டு வயதில் என் தம்பி கிளிநொச்சிக்கு முதல் முதலாக சென்ற போது எங்களை விட்டு நீண்ட தூரம் சென்றுவிட்டான் என கவலையடைந்தேன். ஆனால் தம்பி கிளிநொச்சியில் சிறப்பாகவும் கௌரவத்துடனும் வாழ்ந்த வாழ்க்கையைப் பார்த்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2003ம் ஆண்டு நான் இந்தியாவிற்கு எனது மகளுடன் சென்ற போது என்னை கொழும்பு வரை கூட்டிச்சென்று இந்தியாவிற்கு வழி அனுப்பி வைத்து, மீண்டும் நான் திரும்ப வரும் வரை கொழும்பில் காத்திருந்து என்னையும் எனது மகளையும் யாழ்ப்பாணம் வழி அனுப்பி வைத்தார். எனது மூத்த மகனை, தனது இரண்டாவது மகளுக்கு திருமணம் செய்து வைத்து மகிழ்ச்சியும் அடைந்தார்.

நாங்கள் சிறு வயதிலேயே தந்தையை இழந்து தாயாரின் அரவணைப்பிலேயே வளர்ந்து எனது தம்பிக்கு முதல் பிறந்த சகோதரர்கள். இருக்கும் போது எனது தம்பி எங்களை விட்டு எங்களுக்கு முன் சென்று விட்டார். அந்த ஆண்டவன் கூட தம்பி மீது அளவு கடந்த அன்பு கொண்டமையினால் தான் அவரை தன்னிடம் விரைவாக அழைத்துவிட்டார் போல. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது குலதெய்வம் சிவபூதவராஜரையும், கனகாம்பிகை அம்மனையும் வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

*சுன்னாகம் கிழக்கு*
*சுன்னாகம்.*

*அன்னபாக்கியம்*
*நடராசா*
***(அக்கா குடும்பத்தினர்)***

***ஒரு சிறிய இன்பத்தைத் துறப்பதன் மூலம் ஒரு பெரிய இன்பத்தை அடைய முடியுமெனின் அதனைப் பெறுவதற்காகச் சிறியதை விட்டுக் கொடுப்பவன் அறிவாளி.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசமிகு கந்தையா செல்லையா அவர்கள்

கந்தையா செல்லையா அவர்கள் சுன்னாகம் ஐயனாரைக் குலதெய்வமாகவும், சுன்னாகம் கிழக்கு சிவபூதவராயரை குடும்பக்கோயிலாகவும் சிங்கமாப்பாண முதலி வழித் தோன்றியவருமாவார். சகல வசதிகளும் உள்ள உயர் குடும்பத்தில் பிறந்த இவர் கல்வியைக் கற்று மிகவும் ஊக்கமுடைய இளைஞராக இருந்தார். இளமைத் துடிப்புக் கொண்ட இவர் புதுமை படைக்க வேண்டும் என கிளிநொச்சி சென்றார். கிளிநொச்சி பெரு நிலப்பரப்பில், அக்காலத்தில் காட்டில் குடியமர்த்த அரசு கோழிப்பண்ணை அமைக்க இளைஞர்கட்கு உதவியது. ஒன்பது இளைஞர்கள் ஒன்று சேர்ந்து கனகபுரத்தில் பாரிய கோழிப்பண்ணை அமைத்தனர். இந்த ஒன்பது பேருமே கிளிநொச்சியின் மூத்த முதல் நடிமக்கள் ஆவர் இந்த ஒன்பது பேரும் அன்று தொட்டு இன்று வரை ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என சிறப்பாக வாழ்கின்றனர். இவரே அவர்களில் இளையவர் என்பதால் "பிறதர்" செல்லையா என செல்லமாக அழைக்கப்பட்டு அதே பொருத்தமான புனைப்பெயரை தனதாக்கிக் கொண்டார். இவரின் பேரனார் சுன்னாகம் பெரியமாதடி காசிப்பிள்ளை காட்டு இராசா என அழைக்கப்பட்டது போல் இவரும் காட்டு இராசா ஆனார்.

பாரிய நெற்செய்கையிலும் ஏனைய விவசாயத்திலும் நவீன இயந்திரங்கள், உழவுஇயந்திரம் ஆகியவற்றை முதல் முதலில் கிளிநொச்சியில் அறிமுகப்படுத்தியவர். முதல் முதலில் டிறாக்டர் வாங்கிய போது என்னையும் அழைத்துச் சென்றார்.

இவரின் மனைவி மிகவும் ஊக்கமும் உபசரிப்பில் உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோர் என விருந்தோம்பலில் முன்னிருப்பவர் இது இவரின் வளர்ச்சிக்கு மேலும் மெருகூட்டியது ஆறு குழந்தைச் செல்வங்களைப் பெற்று உரிய வயதில் சொந்தத்துக்குள்ளேயே கலியாணம் செய்து பேரப்பிள்ளைகளையும் கண்டு இனிதே வாழ்ந்தனர். உற்றார் உறவினர்களை எல்லாரையும் அரவணைத்து மகிழ்ந்தனர்.

செல்லையா மாமா எனது தாயார் இராமாசிப்பிள்ளையின் இளைய தம்பி. தெல்லிப்பளை கொல்லங்கலட்டி தையிட்டிப்புலத்தை சேர்ந்த பெரும் பண்ணையாளர் காலம் சென்ற சின்னப்பு - செல்லையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தந்தை அத்தான். அக்காவிடமும் எங்களுடனும் அதிக அன்பும் பாசமும் வைத்திருந்தார் என்னை இவர்கள் எல்லோரும் தம்பி என்றே பாசம் கொட்டி அழைப்பார்கள். எங்கள் குடும்பத்தில் ஒருவனாகவே என்றும் செயற்பட்டவர்.

இறுதியாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். கொழும்பில் வதியும் உறவினர் களாகிய.பிரக்கிராசி திரு. சிவஞானம் குடும்பம், திரு.சிவலிங்கம் குடும்பம், பேருதவி புரிந்தனர். நானும் மனைவியும் சேர்ந்து பூதவுடலுடன் கொழும்பிலிருந்து கிளிநொச்சி சென்று. இறுதி மரணச் சடங்கிலும் எட்டுச் செலவுகளிலும் பங்கேற்றது மன நிம்மதியைத் தருகிறது. அவரின் மனைவியும் இரண்டாவது மகனும் எல்லா நேரங்களிலும் உடனிருந்து பராமாரித்தனர். மரணச்சடங்கில் கிளிநொச்சி மக்களும் யாழ்ப்பாணத்திலிருந்தும் மிகவும் பெருந்தொகை யினர் பங்கேற்றமை அவர் சேவை நலனுக்குப் பெரும் சாட்சியாக அமைந்தது. இன்று அவர் வாழ்ந்த பகுதி கிளிநொச்சியின் தலைநகராக உயர்ந்து திகழ்கிறது. அன்னாரின் வாழ்க்கை இனிவரும் சமூதாயத்துக்கு பெரும் முன் மாதிரியாகும். எல்லா அரசியல் சமய சமூகப் பணிகளிலும் பல உதவிகள் செய்து முன் நின்று நடத்தியவர்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிராத்திப்போமாக
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

***திரு. திருமதி. டாக்டர். வேலாயுதபிள்ளை.***
***(அக்கா குடும்பத்தினர்)***
***புத்தளம்***

**திருநீறு அணியும் போது செய்யத்தகாதவை**

**வாயைத் திறந்து கொண்டும், தலையை**
**அசைத்துக் கொண்டும், பிறருடன் பேசிக்கொண்டும்,**
**பாராமுகம் செய்து கொண்டும், சிரித்துக் கொண்டும்,**
**தலையைக் கவிழ்த்துக்கொண்டும்,**
**நடந்துகொண்டும், கண்ணாடி பார்த்துக் கொண்டும்**
**திருநீறு தரிக்கக் கூடாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. P. SIVAGNANAM, LL.B
Attorney-at-Law & Notary Public, Commissioner for Oaths,
No. 103, Fussels Lane, Colombo 06. Sri Lanka. Tel: 011-2554354

# செல்லையா அண்ணாவின் மறைவுக்கு தம்பி அனுப்பிய மடலிது

அன்புமிகு தங்கச்சி, கோ..கிரேஸ், செல்வம் மற்றும் குடும்பத்தவர் யாவரும் அறிவது,

அண்ணாவின் இறுதிக் கிரிகைகள் யாவும் மிகவும் உருக்கமாக, சுற்றம், உற்றார் , உறவினர் பெருமளவில் குழுமி இருக்க நடைபெற்றதை அறிந்தேன். அவர் மீதும் அம்மாவின் விருந்தோம்பல் பண்பு மீதும் மக்கள் கொண்ட அன்பில் இவ்வாறு நடந்தது.

சுன்னாகத்தில் இருந்து மூன்று வானும், மாதகலில் இருந்து இரண்டு வானிலும் ஓட்டோ, மோட்டார் சைக்கிள் மூலமும் பெருந்தொகை யாக வருகை தந்தது அண்ணாவின் மீதும் தங்கள் எல்லோர் மீதும் கொண்ட அன்புதான் காரணம்.

தாங்கள் இறுதி நேரத்தில் மிகவும் கரிசனையாக தினமும் மூன்று முறை ஆஸ்பத்திரி சென்று அப்பாவின் கடமையை நன்கு நிறை வேற்றி னீர்கள். சிரமம் பாராது தினமும் மூன்று முறை ஆஸ்பத்திரி சென்று பார்த்து மகன் தந்தைக்கு ஆற்றும் கடமையை நிறைவேற்றியது எமது கவனத் தைக் கவர்ந்தது. அம்மாவும் தனது கடமையை நன்கு நிறைவேற்றினார்.

மகன் செல்வம் தனது இரு சிறு குழந்தைகளை கொண்டு வந்து சிரமத்துக்கு மத்தியில் அப்பாவை இறுதித் தருணத்தில் பார்த்தது எமது பாராட்டுக்கு உரியது. 1958ம் ஆண்டளவில் அப்பா வெறும் கையுடன் கிளிநொச்சி வந்து அயரா உழைப்பாலும் மற்றையோருடன் பேணிய நல்லுறவாலும் நல்ல நிலைக்கு வந்தார். கொடிய யுத்தம் இறுதிக் காலத்தில் அவரை நிலைகுலைய வைத்தது. எனினும் பிள்ளைகள் வெளிநாடு சென்றதாலும் இங்கு முயற்சியாலும் நல்ல நிலையிலேயே உள்ளீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் இறைவன் செயல். 1959ம் ஆண்டு வயலில் ஒரு பகுதி என் பெயரில் எழுதப்பட்டது. அன்று முதல் செல்லையா அண்ணாவுடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. எங்கள் வீட்டு சகல இன்ப, துன்ப சம்பவங் களிலும் அவர் பங்குபற்றுவார். எமது அப்பாவுடன் மிக நெருங்கிய தொடர்பு அவருக்கு இருந்தது.

செல்லையா அண்ணாவின் இறுதி 15 நாட்கள் அவர் அருகில் இருக்கக் கிடைத்தது மிகவும் திருப்பதியை அளித்தது. நான் அவர் சுகமடைவார் என்று முதலில் மிக நம்பிக்கை கொண்டிருந்தேன். பின்னர் மருத்துவ அறிக்கைகள் நம்பிக்கையை இழக்க வைத்தது.

அவர் சுகமடைந்து திரும்பாதது மிக்க கவலை. நீங்கள் இங்கிருந்த போது தாராளமாகச் செலவு செய்து எமக்கு எதுவிதத்திலும் சிரமம் கொடுக்காது நடந்து கொண்டீர்கள்.

உங்கள் யார்க்கும் எமது கடமை உண்டு. இங்கு இருந்த போது உங்களுக்கு ஏதாவது குறை ஏற்பட்டிருப்பின் எமது கவலையை தெரிவிக் கிறோம்.

நீங்கள் யாவரும் மிக ஒற்றுமையாக இருக்க வேண்டும். இங்கு மிஞ்சியிருக்கும் பிள்ளைகள் கோகிலேசும், செல்வமும் மாத்திரமே சகோதரர்கள். ஒற்றுமையே முன்னேற்றத்திற்கு வழி. நீங்கள் எந் நேரமும் இங்கு உங்கள் தேவைகட்கு வரலாம். வரவேண்டும். ஏதாவது உதவி தேவையெனில் தொடர்பு கொள்ளவும்.

இக் கடிதத்தை குடும்ப அங்கத்தவர்கள் யாவரும் வாசிக்க வேண்டும்.

ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகுக.

இப்படிக்கு
சிவஞான மாமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் செல்லையா பிறதரது பின்னணிக் கதையிது.

*உடல் உழைப்பால் உயர்ந்து உண்டி கொடுத்து உயிர் காத்த உத்தம விவசாயி. அன்னாரைப் பற்றி சிறிது அறிந்து கொள்வோமா?*

கமத்தொழிலே கருந்தனமாகக் கொண்ட சுன்னாகம் கிழக்கில் கந்தையாவுக்கும் செல்லாச்சிப்பிள்ளைக்கும் இளைய புத்திரனாகப் பிறந்தார். கமத்தில் உதவி செய்வதுடன் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கல்வி பயின்று வரலானார். அக்காலப்பகுதியில் ஸ்கந்தாப்பிள்ளைகள் என்றால் பிரபல பொதுவுடமைத் தத்துவ வீரராம் வீ.பொன்னம்பலம் அவர்களின் பின்னால் திரிபவர்களாகவே அநேகமாக னோர் இருந்துள்ளார்கள். அந்த வகையில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர வகுப்பில் கல்வி பயின்ற செல்லையா பிறதரும் அவரது தோழரானார்.

நாட்டின் சூழ்நிலையோபயங்கரம். இனக் கலவரம் அடிக்கடி மூழ்வதாலும் தமிழ் மக்கள் நிற்கதியாகி கடல்மார்க்கமாக உடுக்கத் துணியுமின்றி வட பகுதி நோக்கி வந்த காலம், இப்படியான சூழ்நிலைகள் பள்ளி மாணவர்கள் மத்தியில் கறைகளாகவும் வடுக்களாகவும் பதிந்து எழுச்சியூட்டிக் கொண்டிருந்தன. தக்க முறையில் நெறிப்படுத்தும் தலைவர்கள் இல்லாத காலமது.

செல்லையா மாணவனது உள்ளமும் உணர்ச்சி வசப்படாது இருக்க முடியாது. இப்படியான காலகட்டத்தில் யாழ் மாவட்டத்திலுள்ள எல்லாக் கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கும் கி.மு.ச. அதிகாரிகளின் மேலாளரிலிருந்து அழைப்பு விடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் வெவ்வேறு கி.மு. சங்கங்களிலிருந்தும் இருவர், மூவரென தெரிவு செய்யப்பட்டு மேற்படி மேலாளரின் அலுவலகம் அமைந்த கோண்டாவில் கிழக்கிற்கு பயிற்சிக்காக அனுப்பப்பட்டார்கள். அந்தப் பயிற்சிப் பட்டறை இருவாரங்கள் நீடித்தது. தங்குமிடம், உணவு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அப் பயிற்சிப் பட்டறைக்கு சுன்னாகம் மயிலப்பையைச் சேர்ந்த காலஞ்சென்ற குமாரசாமி அவர்கள் தலைமை தாங்கும் மேலாளராக இருந்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது உதவியாளராக தற்போது பிரபல சோதிட ஆசானாக இருக்கும் நவரத்தினம் அவர்கள் இருந்துள்ளார்கள். அங்கு பயிற்சிப் பட்டறையில் பங்குகொண்டோர் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | வே. மார்க்கண்டு | வட்டுக்கோட்டை |
| 2. | ச. செல்வரத்தினம் | வடலியடைப்பு (பண்டத்தரிப்பு) |
| 3. | அ. சோமசுந்தரம் | பண்டத்தரிப்பு |
| 4. | க. செல்லையா | சுன்னாகம், கிழக்கு |
| 5. | நா. சோதிநாதன் | ஆலங்குளாய், சண்டிலிப்பாய் |
| 6. | சிவனேந்திரன் | சுன்னாகம் |
| 7. | சி.குலசேகரப்பிள்ளை | அராலி |
| 8. | சிவப்பிரகாசம் | வட்டுக்கோட்டை |
| 9. | மரகதலிங்கம் | கட்டுவன், தெல்லிப்பளை |
| 10. | க. இராசரத்தினம் | புன்னாலைக்கட்டுவன், வடக்கு |
| 11. | வொ. சீவரத்தினம் | புன்னாலைக்கட்டுவன்,வடக்கு |
| 12. | சு. சிவதாசன் | உயரப்புலம், ஆனைக்கோட்டை |
| 13. | மு.கதிர்காமநாதன் | மாதகல் |

அமரர் கந்தையா செல்லையா



காலை மாலையெல்லாம் தொடர்ச்சியான வகுப்புகள் நடைபெறும். அவ் வேளைகளில் நாட்டின் அக்கால அரசியல் நிலைமைகள், உலக அரசியல் நிலைமைகள் மற்றும் ஜனநாயகம், பொதுவுடமை போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களில் மிகவும் தெளிவாக விளக்கமளிக்கப்பட்டன. இப் பயிற்சியின் விளைவாக பயிற்சியிலீடுபட்ட இளைஞர்கள் மத்தியில் ஒரு புத்துணர்வும், தாங்கள் ஏதாவது ஒரு சாதனை நிலைநாட்ட வேண்டு மென்ற ஆர்வமும் தூண்டப்பட்டது. அதன் பலனாக ஒரு நிம்மதியளிக்கும் வாழ்க்கை முறை என்ன? அதனை எப்படி அடைய முடியுமென்று ஆராய முற்பட்டனர். அதற்கு பக்கபலமாக தமிழ் மக்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் மறுக்கப் படுவதும், அருகிவருவதும் இருந்துள்ளன. கி.மு.ச. தலைமையதிகாரி குமாரசுவாமி அவர்கள் இக் கூட்டத்தில் ஒரு மனிதனுக்கு நிம்மதியான வாழ்வை அமைக்க முக்கியமானவை (1) ஆதரவு, (2) பாதுகாப்பு, (3) மதிப்பு என்பதனை விளக்கமாகவும் விபரமாகவும் கூறி மனதில் படிய வைத்தார். இம் மூன்றும் ஒருங்கே அமையக் கூடிய வாழ்க்கை முறையைத்தான் ஆச்சாரிய வினோபாபாவே, ஜெயப்பிரகாஷ், நாராயன், போன்ற ஆத்ம ஞானிகள் சர்வோதய கிராமோதய முறையிலான குழுவாழ்க்கை முறையை வழிநடத்தி வந்துள்ளார்கள். அங்கு மேற்கூறப்பட்ட ஆதரவு, பாதுகாப்பு, மதிப்பு ஆகியவை ஒருங்கே கிடைக்கும் என்றும் அப்படியான ஒரு திட்டத்தை நாம் ஏன் உருவாக்கி வாழ்ந்து காட்ட முடியாது என்றும் வேண்டுகோள் விடப்பட்டது.

அப்படியான ஒரு முன்னோடி வாழ்க்கை முறையை அமைத்து வாழ்ந்து காட்ட விரும்புவதாக பயிற்சியிலிருந்த இளைஞர்களுள் பலர் முன்வந்தனர். இவ் விருப்பத்தை கி.மு.ச. தலைமையதிகாரி காலஞ் சென்ற குமாரசாமி அவர்கள் அப்பொழுது அரச அதிகாரியாகவிருந்த அமரர் ம. ஸ்ரீகாந்தா ஐயா அவர்களிடம் தெரிவித்தார்கள்.

இவ் இளைஞர்களின் உற்சாகத்தை அறிந்த அரச அதிபர் அவர்கள் தான் ஒரு நேர்முகப் பரீட்சை நடாத்த விரும்பினார், திகதி, நேரம் குறிக்கப்பட்டு யாழ் கச்சேரி மாநாட்டு மண்டபத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. அப்பொழுது வயது குறைந்தவர்களைப் பார்த்து இன்னும் படிக்கலாமே படிப்பைக் குழப்ப வேண்டாமென கூறிய போது தாங்கள் இப்படியான ஒரு முன்னோடித்திட்டத்தை ஆரம்பித்து வாழ்ந்து காட்ட விரும்புவதாக அரச அதிபர் அவர்களிடம் தெரிவித்தனர். இதனை அரச அதிபர் அவர்கள் மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய அதிகாரிகளுக்கெல்லாம் பணிப்புரைகள் பறந்தன. எந்த இடத்தில் ஆரம்பிப்பது என்பதையும் அதற்கான நாள் கோள்கள் எல்லாம் தீர்மானிக்கப்பட்டு விட்டன. இத்தனை செயற்பாடுகளும் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை தவயோகி யோகசுவாமிகளின் மனப்பூர்வமான ஆசி களுடனேயே ஆரம்பிக்கப்பட்டன. அமரர் ஸ்ரீகாந்தா ஐயா அவர்கள் யோகசுவாமிகளது அணுக்கத் தொண்டரல்லவா? அவரிட்ட கட்டளையை மீறினது கிடையாது. காட்டுக்குவர பதினொரு இளைஞர்களே தேறினார் கள். அவர்கள் தங்கள் தங்கள் ஊர்களில் வசதியுடன் வாழ்ந்தவர்கள். சொல்லமுடியாத எதிர்ப்பின் மத்தியில் வந்து ஆரம்பித்தவர்கள்.

1958ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் நாள் பகல் 12 மணிக்கு அவர்களது வாக்குப்படி அமரர் குமாரசாமி அவர்களினால் பெயர் குறித்து ஆரம்பிக்கப்பட்ட இளங்கதிர் குழுவாழ்க்கைப் பண்ணை' கிளிநொச்சி நகர மத்தியில் புதுமுறிப்பு றோட்டின் வடதிசையில் கண்டிவீதியிலிருந்து 200 யார் தொலைவில் புகையிரதப் பாதையோரத்தில் கிளிநொச்சி வாழ் பிரமுகர் களான யோகலிங்கம் ஜே.பி, அருளப்பு ஒப்பந்தகாரர், ஜெயினுலா புதீன் காக்கா கடை மற்றும் இப்பகுதி விதானைமார்களான இராசையா, மார்க்கண்டு, மகாலிங்கம், கந்தையா, பேரம்பலம், ஆகியோர் பிரசன்ன மாயிருந்தனர். அப்போதைய பெரும்பாக இறைவரி உத்தியோகத்தவராக இருந்த முருகேசம்பிள்ளை ஐயா அவர்கள் சகலவிதமான ஏற்பாடுகளை யும் செய்திருந்தார். அத்தருணம் ஜெயந்தி நகர் மகாதேவ ஆச்சிரம செயலாளர் காலஞ்சென்ற த. நல்லதம்பி அவர்களும் சமூகமளித்திருந் தார். சில நாட்களின் பின் தவத்திரு வடிவேல் சுவாமி அவர்களால் 18 கிழமைகளாக 18 அத்தியாயம் கொண்ட பகவத்கீதை வகுப்பு நடைபெற்றது.

ஒரே சோலைக்காடு, யானை போக்குவரத்துச் செய்யும் பாதை, கிளிநொச்சி புகையிரத நிலைய தெற்குப் பக்க கைகாட்டி மரத்தடிக்கும் புதுமுறிப்பு றோட்டுக்கும் (தற்போதைய டிப்போறோட்) இடையில் சமயா சார முறைப்படி பூரண கும்பம் வைத்து திரு சு.சிவதாசன் தேவார பாராயணம் பாட திரு முருகேசம்பிள்ளை ஐயா அவர்கள் தேங்காய் உடைக்க அரச அதிபர் காலஞ்சென்ற ம. ஸ்ரீகாந்தா ஐயா அவர்கள் காட்டுக் கத்தி எடுத்து முதலாவது மரத்தை வெட்டி ஆரம்பித்து வைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று தொட்டு அங்கு வந்து சேர்ந்த வீர இளைஞர்கள் கிளிநொச்சி புகையிரத நிலையத்துக்கு முன்பிருந்த அரச மர அரிவு ஆலை தற்காலிக தங்குமிடத்தில் வசித்து வந்தனர். அவர்கள் படுத்திருக்கும் பாய்க்குக் கீழே பாம்புகள் தாலாட்டும். ஏதோ தப்பிப் பிழைத்து விட்டார்கள். காடு துப்பர வாக்கி முடிவுற்றதும் கிணறு வெட்டும் வேலை ஆரம்பமானது. முதலாவது கிணறு 18 அடி விட்டத்தில் அங்கு வந்து சேர்ந்த 11 இளைஞர்களும் வெட்ட ஆரம்பித்தனர். ஒரு நாள் 10 அடி ஆழம் வரை வெட்டியிருக்கும் வேளை ஸ்ரீகாந்தா ஐயா அவர்கள் வந்து பிள்ளைகள் என்று கூப்பிட்டுள்ளார். அப்பொழுது எங்களுக்குள்ளேயே ஒரு குடும்ப அமைப்பு முறை இருந் துள்ளது. அதில் வே. மார்க்கண்டு அப்பு என்றும் சிவனேந்திரன் ஆச்சி என்றும் செல்லையா பிறதர் என்றும் செல்வரத்தினத்தை உபாத்தியார் என்றும் இராசரத்தினத்தை குரு என்றும் குலசேகரத்தை பாட்டா என்றும் இன்னும் ஒவ்வொரு தம்பி அண்ணா என்றெல்லாம் பெயரிட்டு வழங்கி வரலாயினர். இங்கு குறிப்பிட்ட ஆச்சி ஸ்ரீகாந்தா ஐயா என்று தெரியாது. யாரது இங்கே வேலை செய்யும் நேரத்தில் குழப்புவதென்று கூறிவிட்டார். பின்பு தான் தெரிந்து கொண்டோம் அரச அதிபர் என்று. அவரும் நாங்கள் எல்லோரும் கிணற்றடியில் அடுப்பு மூட்டி வைத்த தேநீரை தேங்காய்ச் சிரட்டையில் குடித்து மகிழ்ந்த காட்சி என்றும் எங்கள் மனதைவிட்டு அகலாது. அரச அதிபரும் எங்களில் ஒருவராக சிரட்டையில் பருகியது அவரது உள்ள வளர்ச்சியை கோடிட்டுக் காட்டுகின்றதல்லவா?

இந்த மாதிரி எங்கள் முன்னோடித்திட்டத்திற்கு வருவாய் ஏற்படுத்த வேண்டி, கழித்து விட்ட கோழிகள் 50 திருநெல்வேலி அரச பண்ணை யிலிருந்து வரவழைத்து வளர்க்க ஆரம்பிக்கப்பட்டதுடன் காய்கறிப் பயிர்ச் செய்கையும் ஆரம்பித்திருந்தோம். காய்கறித்தோட்டத்தில் கைதேர்ந்த வரல்லவா செல்லையா பிறதர். அவர்களை தலைவராக நியமித்திருந் தோம். முட்டையும் சாப்பிடாத மரக்கறி உணவாளியான இராசரத்தினத்தை மிகவும் சாதுரியமாக கோழி வளர்ப்பு பொறுப்பாளியாக்கி விட்டார்கள். இவ்வாறு ஒவ்வொருவருக்கும் பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.

கமச் செய்கைப் பொறுப்பான செல்லையா பிறதர் வேலை நேரத்தில் எல்லோரோடும் கடுமையாகவே நிற்பார். சக நண்பர்கள் என்றும் பாராது அடியும் போட்டிடுவார். 1960ம் ஆண்டில் மரக்கறித் தோட்டத்தில் 100



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறாத்தல் எடையுள்ள பூசனிக்காய் எங்கள் தோட்டத்தில் பிடுங்கினோம். அது மாத்திரமல்லாது கிளிநொச்சி சந்தையில் கனகபுரம் மரக்கறியும் வாழைக்குலைகளுமே இடறுப்படும். அவ்வளவு ஏராளம். சிவராத்திரி காலங்களில் யாழ் சிவதொண்டன் நிலையத்து அன்னதானத்திற்கு எங்கள் விவசாயப் பொருட்களே பெரும் பங்கு வகிக்கும்.

ஆடுகளை மேய்த்துப் பராமரிக்க வயதில் குறைந்த இருவரும் புறப்பட்டார்கள். கோழி வளர்ப்புப் பகுதியில் நாளுக்கு 1800 முட்டைகள் உற்பத்தியாகின காலமது. 12 கொட்டில்களில் 3000 கோழிகள் வளர்க்கப் பட்டுள்ளன. கோழி முட்டை விற்பனைக்குத் திண்டாடிய காலமது. அரச அதிபர் ஸ்ரீகாந்தா ஐயா அவர்கள் ஒவ்வொரு செவ்வாயும் வெள்ளியும் தவறாது எங்கள் சுக சேமங்களை அறிய வருவதுண்டு. குசினிப் பக்கம் வந்து சட்டி பானை வரை கரிசனையுடன் பார்வையிடுவார். குடும்பமாகவே வந்து போவார்கள். போகும் போது தனது கார் டிக்கிக்குள்ளே முட்டை ஏற்றிக் கொண்டு போய் யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்து அப்பணத் தைக் கொண்டு வந்து தருவார். *A.G.A.* முருகேசம்பிள்ளை அவர்கள் கழித்து விடும் கோழிகளை லொறியில் ஏற்றிச் சென்று 1ம் முறை, 2ம் முறை என்று ஏலம் போட்டு விற்பனை செய்து உதவியுள்ளார். ஸ்ரீகாந்தாஐயா அவர்களை எங்கள் தந்தையாகவும் முருகேசம்பிள்ளை ஐயா அவர்களை எங்கள் தாயாகவும் பேணி வந்துள்ளோம்.

ஸ்ரீகாந்தா ஐயா அவர்கள் எடுத்ததற்கெல்லாம் பிறதரைக் கூப்பிட்டு முன்னுக்கிருத்துவார். பாலைப் பாணி என்னும் தனது கமத்தில் ஒரு பழம் பிள்ளையார் கோயில் அடிக்கல் நாட்டுவதற்கு செல்லையா பிறதரையே தேங்காய் உடைக்கும் படி வேண்டிக் கொண்டார். ஏனெனில் உண்டி கொடுத்தேன் உயிர் கொடுத்தோனே என்பது வள்ளுவர் மொழி. இவர் அசல் கமக்காரன் அல்லவா. ஆகவேதான் அவ்வளவு மதிப்பும் மரியாதையும்.

யோகர் சுவாமிகளது அருள் வாக்குப்படி பருந்து வழிகாட்டி ஆரம்பிக் கப்பட்ட கனகாம்பிகை அம்பாள் ஆலயமும் கனகபுரமும் பின்னிப் பிணைக் கப்பட்டவையாயின. யோகசுவாமிகளது அருளாட்சியில் உதித்தது தான் கனகாம்பிகை அம்பாள் ஆலயமும். கனகபுரம் கிராமமுமாகும். செல்லையா பிறதர் குடும்பப் பாரம்பொறுக்கத் தொடங்கியதும் பொதுவுடமைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவமும் போச்சுது, வீ. பொன்னம்பலத்தின் கூட்டும் போச்சுது என்றாகி விட்டது. அம்பாளின் அருட் பார்வைக்குட்பட்டு விட்டார். எந்த நேரமும் அம்பாளது பெயரையே உச்சரிப்பார். அம்மா அம்மா என்றே ஓலமிடுவார். அம்பாளின் சேவையென்றால் தள்ளாத வயதென்றாலும் சைக்கிள் உளக்கிச் சென்று தரிசனம் செய்திடுவார்.

'ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா' என்ற தத்துவ பாடலுக்கு ஏற்ப அடங்கிவிட்டார். செல்லையா பிறதர் . அன்னாரது இத்தனை செயற்பாடுகளுக்கு தோளோடு தோள் கொடுத்து உதவியவர் அவரது பாரியார் பிரணவசோதியாகும். ஆண்களும் பெண்களும் சரிச மாக ஆறு செல்வங்களைப் பெற்று கண்ணை இமை காப்பது போல் காத்து வளர்த்தெடுத்தார்கள். அவர்கள் அனைவரும் ஆலமரம் போல விழுது விட்டு வளர்ந்து தண்ணிழல் பரப்பி வருகின்றார்கள். வந்தாரை வரவேற்று ஆத்மசாந்தி செய்து உண்ணீர் உண்ணீர் என்று உண்டி கொடுத்து உபசரிக் கும் பண்புக்கு ஈடிணையற்றவராக இருவரும் வாழ்ந்துள்ளார்கள். அவர் களது தொண்டு ஏழு பிறப்பும் சென்றுதவும் புனிதத் தொண்டாகும். தளர்வு சோர்வின்றி சமையல் செய்து உண்டியளிக்கும் உள்ளப்பாங்கை வர்ணிக்க வார்த்தைகள் கிடையாது. நாட்டின் அபாயகரமான நிலைமைகளில் கூட நாடிவரும் தியாகசீலர்களை தக்கமுறையில் அனுசரித்தனுப்பும் பண்பில் உயர்ந்து விட்டார் அன்னாரின் பாரியார் பிரணவசோதி அவர்கள். யாவர்க்கும் உண்ணும் போதொரு கைப்பிடி என்ற திருமந்திர பாடலுக்கு ஒப்ப அவர்கள் தொண்டிற்கு இறையாசிகள் பொலிந்து நிறைவதாக.

இத்தனைக்கும் ஈடுகொடுத்தது செல்லையா பிறதரின் தொழிற் திறனாகும். அவர்களது சொந்த தொழிலுடன் அரச ஒப்பந்தகாரராக பல ஒப்பந்த வேலைகளைச் செய்து பாராட்டுக்களைப் பெற்றுள்ளர்.

உழவுயந்திரத்தின் உரிமையாளராகி கிட்டத்தட்ட 50 ஏக்கர் வரை குத்தகையாகவும் சொந்தமாகவும் வயல் செய்து வீட்டியே நெல்லுக்கு, கடலை, உழுந்து, பயறுக்கு, மரக்கறிவகைக்கு இன்னும் பல தயிர் மோர் வகைக்கு குறைவில்லாது சுயதேவை பூர்த்தியுடன் வாழ்ந்த பெருமகன் அமரத்துவம் அடைந்து விட்டார். மெழுகுதிரி எரிந்து தன்னை உருக்கியது போல தன்னையே அழித்து உபகாரியாக வாழ்ந்து கனகபுரவாசியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகபுர மண்ணுக்கே இரையாகிவிட்டார். அவரோடு சுவடிவாழ்ந்த நாங்கள் முன்னோடித்திட்டத்தின் ஆணிவேராக வாழ்ந்த செல்லையா என்ற செல்வப் பிறதரின் ஆத்மா சாந்தியடைய மனதாரப் பிரார்த்திக் கின்றோம்.

"வானுக்குள் ஈசனைத் தேடும் மருளர்காள்
தேனுக்குள் இன்பம் சிவப்போகறுப்போ
தேனுக்குள் இன்பம் சிறந்திருந்தாற் போல்
ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே
– திருமந்திரம்

1ம் பண்ணை முன்னோடிகள்
கனகபுரம்
கிளிநொச்சி

க.இராசரத்தினம் (குரு)
(ஓய்வுபெற்ற நீதிமன்ற பதிவாளர்
அகில இலங்கை சமதான நீதவான்
சத்திய மொழிபெயர்ப்பாளர்)

*தீமையைச்
செய்ய யாரையாவது
தூண்டிவிட நினைத்தாலே
போதும், அந்த தீமையைச் செய்து
அவர் பெறப்போகும் தண்டனையை
விட பலமடங்கு தண்டனைகள்
தூண்டி விட்டவரைத்
தேடி ஓடிவரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரின் உயர்வுக்காகவும் ஊர் மக்களின் உயர்வுக்காகவும் உழைத்த உத்தமர் செல்லையா

1958ம் ஆண்டு தொடக்கி வைக்கப்பெற்ற படித்த வாலிபர் மேட்டு நிலக் குடியேற்றத் திட்டத்தின் முதலாம் பண்ணையான ‘இளங்கதிர் குழு வாழ்க்கைப் பண்ணையின் உயிர் நாடியான உறுப்பினர் திரு. செல்லையா. இத்திட்டத்தில் கோழி வளர்ப்பு மேட்டுநிலப் பயிர்ச் செய்கை என்பன இரு பெரும் முயற்சிகளாக இருந்தன. இவற்றில் முதலாம் பண்ணைப் பயிர்ச் செய்கைப் பொறுப்பாளராக இருந்த இவர் நிரம்பிய தோட்டப் பயிர்ச் செய்கை அனுபவம் உடையவராக இருந்தார். இவரிடம் அறிவு அநுபவம் என்பவற்றுடன் இருந்த துணிவு அடர்ந்த பெருங்காட்டின் நடுப்பகுதியில் பண்ணையைத் தொடங்க உதவியாக இருந்தது. அத்துடன் யாழ்ப்பாண, மலைநாட்டுக் காய்கறிகளுடன் போட்டி போட்டு விற்பனைப்படுத்தக் கூடிய சந்தைப் பெறுமானமுடைய காய்கறிகள், கிழங்கு வகைகள், மிளகாய், வெண்காயம், வாழைக்குலை என்பனவற்றை இப்பண்ணை உற்பத்தி செய்து போட்டிச் சந்தையில்வெற்றி பெற இவரது பணிகள் உதவின. சுற்றிவர காடாக இருந்தால் யானை, பன்றி, குரங்கு போன்ற காட்டு மிருகங்களிடமிருந்து செய் பயிர்களையும் தென்னை பனை, மா , தோடை போன்ற வான் பயிர்களையும் பாதுகாக்கும் பணி இவரை வேட்டைக்கார னாக்கியது. இப்படியான தனித்திறமைகளால் இவர் ஏனைய பண்ணை களுக்கும் உதவுபவராக இருந்தார்.

பண்ணை வாழ்க்கை முடிவுற்று பிரிக்கப்பட்ட 1962ம் ஆண்டில் இருந்து இவர் நாலாம் வாய்க்கால் கோணாவில போன்ற பகுதிகளில் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டு பெரும் வெற்றி கண்டார். நெற் செய்கையில் விவசாய மன்னராகப் புகழ் பெற்றார். இக்காலத்தில் முதலாம் பண்ணையில் ஏனைய உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட இடர்களில் கை கொடுத்து உதவினார். பண்ணை உடபிரிவுகளிடையே தோன்றிய சிறு சிறு பிரச்சினைகளில் தலையிட்டு நீதியை நிலைநாட்டினார். தனது உழவு இயந்திரம் மூலமும் இவர்களுக்கு உதவிகள் செய்தார். ஒரு விவசாயி மதிப்பு மரியாதையுடன் வாழலாம் என்று வாழ்ந்து காட்டினார். இல்லறத் தில் ஈடுபட்டார். பல குழந்தைகளுக்கு மதிப்புக்குரிய தந்தையானார்.

வெள்ளாமை வெற்றி பெற வெற்றி பெற பெரிய ஒப்பந்தகார ரானார். இவர் இம் மாவட்டத்தில் பல தெருக்களைச் செப்பனிட்டும் ஒப்பந்த வேலைகளைச் பெற்று இன்று வரை பலர் பாராட்டும் படியான பல பணி களைச் செய்துள்ளார். 1966ம் ஆண்டு முட்பற்றைக் காடுகள் நிறைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்த கனகபுரம் உள்வீதிகளைச் செப்பனிடும் ஒப்பந்த வேலையை முதல் முறையாக பொறுப்பேற்று நீண்ட நாள் நிலை பெறத்தக்கதான பணிகளைச் செய்தார். இந்தக் காலத்தில் இவர் வேளாண்மைச் செய்கை யிலும் ஒப்பந்த வேலைகளிலும் கிளிநொச்சி முழுவதும் அறிமுகமானார். இவ்விரு பணி களிலும் பல அரச அதிகாரிகள் அரச அதிபர்களின் பாராட்டைப் பெற்றார். அப்போது பிரபலமான பிரமுகர்களாக பல செல்லையாக்கள் இருந்தனர். பலர் தமது சொந்த ஊர் பெயரை அடைமொழியாக கொண்டிருக்க இவர் உறவு முறையில் அன்பு காட்டியதால் (பிறதரது) சகோதரர் செல்லையா ஆனார்.

இவர் பொருளாதார மேம்பாடடைந்திருந்த காலத்தில் கிளிநொச்சி யின் அடிப்படை வளர்ச்சிக்கு வைத்தியததையும், கல்வியையும் மேம்படுத்தி உயர நிலைக்கு கொண்டு வர வேண்டும் என்று கருதினார். 1966 களில் கிளிநொச்சி வைத்தியசாலையில் போதிய அரச குடிமனைகள் இல்லாத தால் தனது வீட்டில் வைத்தியர்களுக்கும் ஏனைய வைத்தியப் பணியில் இருந்தவர்களுக்கும் உணவும் உறைவிடமும் கொடுத்து அளப்பரிய சேவை செய்தார். வேறு யார் வந்தாலும் தங்க இடங்கொடுத்து உணவளித்து ஆறுதலளித்தார்.

இவர் கல்வி முன்னேற்றத்திற்கும் பல பாடசாலைகளுக்கும் உதவினார். கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு நீண்ட காலமாக உபயோகித்த விளையாட்டு மைதானத்தை செப்பனிட்டுக் கொடுத்தார். கல்லூரியின் பெற்றார் ஆசிரிய சங்க உறுப்பினராக இருந்து சுறுசுறுப்பாகச் செயற்பட்டு அக் கல்லூரியின் முன்னேற்றத்திற்கு உதவினார்.

இவர் ஸ்கந்தவரோதயக கல்லூரியில் கல்வி கற்றவர் என்பதால் சமூக சீர்திருத்தச் சிந்தனைகளை கொண்டவராக இருந்தார். அக் காலத்தில் இப்படியான சமூக சீர்திருத்தவாதிகள் பலர் சமய நாட்டம் இல்லாதவர்களாக இருந்தனர். ஆனால் இவர் கடவுள் நம்பிக்கையும் சமய ஈடுபாடும் உடையவராக இருந்தார். இவர் இரணைமடு கனகாம்பிகை அம்பாள் நடாத்திய அற்புதங்களை பெருமையாகச் சொல்லுவார். இறக்கும் தருணத்திலும் அம்பாளினது பெயரை உச்சரிப்பவராகவே இருந்தார்.

இவருடைய ஆன்மா அமைதியடைய குடும்பத்தினர், உறவினர், ஊரவர், நண்பர்கள் ஆறுதலடையவும். கனகாம்பிகை அம்பாளை வேண்டுகிறோம்.

இங்ஙனம்
நா. சோதிநாதன்
முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் உயர் திரு கந்தையா செல்லையா (பிறதர்) அவர்கள் நினைவாக.

**அன்பர்க்கு அன்பனாய் தொண்டனிற்கு தொண்டனாய் அடியவர்க்கு அடியவனாய் அறப்பணிக்கு தமை அர்ப்பணித்து அகிலம் போற்ற வாழ்ந்தவரே அமரர் கந்தையா செல்லையா அவர்கள்.**

அன்னார் திருவருள் மிகு கனகாம்பிகை அம்பாள் மீது பெரும் பக்தி உடையவராகவும், அம்பிகையின் திருப்பணிகளின் போது தோளோடு தோள் நின்று பணியாற்றியவருமாக விளங்கினார்.

அவர் அம்பிகையின் தேர்த்திருப்பணியின் போது தேர்களிற்கான வடத்தினை வழங்கி உதவியதோடு அத் திருப்பணி நிறைவுறும் வரை தம்மை அர்ப்பணித்து அயராது பணியாற்றினார்.

அது மட்டுமல்லாது அம்பிகையிற் கொண்ட பேரன்பினால் ஆண்டு தோறும் நடைபெறும் அம்பிகையின் திருவூர்வலத்தின் போது அம்பாளின் அடியவராகி உடனிருந்து பணியாற்றியவர்.

அம்பிகையின் வருடாந்த மகோற்சவ காலங்களிலும் அன்னாரின் அறப்பணிக்கு குறைவேயில்லை. கனகாம்பிகை அம்பாளின் கொடியேற்றத் திருவிழாவினை சிறப்புற நிகழ்த்துவதற்கு அன்னார் பின் வாங்குவதில்லை. சிறப்பாக இடப் பெயர்வு காலத்தில் இத்திருவிழாவினை கனகபுர மக்களுக்காக தானே முன்வந்து பொறுப்பேற்று திறம்பட நிகழ்த்தியமையை எவரும் மறக்கமுடியாது.

அன்னார் தனது இறுதிக் காலத்தின் போதும் அம்பாளின் உற்சவங்களில் கலந்து அம்பிகையின் அருட்கருணையுடன் சிவபதமடைந்தார். அம்பாளின் தொண்டனாக மட்டுமன்றி கிளிநகரின் சைவத் தொண்டனாக இருந்து அரும் பெரும் பணிகளாற்றி மறைந்த அன்னாரது ஆத்ம சாந்திக்கும், அவர் பிரிவால் துயர்க் கடலில் மூழ்கியிருக்கும் குடும்பத்தவரின் மனவமைதிக்கும் அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

**அறங்காவலர் சபை**
**இரணைமடு கனகாம்பிகை அம்பாள்**
**பெருங்கோவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தார் பெருமை

அமரர் கந்தையா செல்லையா (பிறதர்) சுன்னாகம் கிழக்கு சிங்கமாப்பாணர் வழித்தோன்றலாவார். அன்னார் எனது உறவுமுறை மைத்துணராவார். அவருடன் நான் சிறுபராயம் முதல் அவர் இறக்கும் காலம் வரை பல கட்டங்களில் ஒன்றாகவே வாழ பாக்கியம் கிடைத்தது. சிறு வயதில் நானும் அமரரும் ஒன்றாகவே தோட்டத்தில் விவசாயப் பணிகளில் ஈடுபட்டிருந்தோம்.

அன்னாரை எனது தகப்பனாரும் (சின்னத்தம்பி) அன்னாரது மூத்த சகோதரர்களும் (காசிநாதர், சின்னத்துரை) ஆகியோருடன் என்னையும் சேர்த்து வழிநடத்தி வந்தார்கள். அதன் காரணமாக நாம் அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டவை எண்ணிலடங்கா. ...

நானும் அமரரும் ஸ்கந்தா கல்லூரி கந்தரோடை சுன்னாகத்தில் கல்வி கற்று வந்தோம். அமரர் என்னைவிட நான்குவகுப்பு மூத்தவராகவே பயின்று வந்தார். அன்னாரது துவிச்சக்கரவண்டியில் நான் பாடசாலைக்குச் செல்வதும் வருவதும் வழக்கமாக இருந்தது. பாடசாலையில் அமரர் விளையாட்டுத் துறைகளில் பாடசாலை முன்னேற்றத்திற்காக செயற்பட்டு ஆசிரியர்களதும் அதிபரதும் பாராட்டுதலைப் பெற்றுள்ளார். அமரரிடம் தன்னடக்கமும் , பொறுமையும் விடாமுயற்சியும் நற்பண்பும் இயல்பாகவே அமைந்து கிளிநொச்சியில் குடியேற்ற காணிகள் கொடுப்பதற்கு விண்ணப்பம் கோரிய போது முதல்வராகச் சென்று பெயர் பதிவு செய்து எமது மண்ணை அன்னியன் ஆக்கிரமிக்காது அதை நாம் பாது காக்க வேண்டும் என்ற உயரிய நோக்கோடு படித்த படிப்பை உதறிவிட்டு பாரிய கஷ்ரங்களுக்கு மத்தியில் காட்டு விலங்குகள் விச ஜந்துகளுக்கு முகம் கொடுத்து காட்டை வெட்டி நாடாக்கினார்.

எனக்கு அரச தொழில் கிடைத்து பிற மாவட்டங்களுக்குச் சென்று கடமையாற்றியதால் தொடர்பு சில காலம் குறைவாகவே இருந்தது. 1974ம் ஆண்டு அமரரின் தாயார் சுகயீனமுற்று கொழும்பு வைத்தியசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகிச்சை பெற்றுவரும் வேளை மீண்டும் எமக்கிடையில் தொடர்புகள் ஏற்பட்டு அன்னாரின் தாயாருக்கு நாமிருவரும் அளப்பரிய பரிகாரங் களைச் செய்து அவரை குணமடைய வைத்து அமரருடன் சிறு காலம் வாழ்ந்து இறைபதம் எய்தினார். 1975ம் ஆண்டு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு மாற்றலாகி நான் குடும்பமாக வந்த சமயம் அன்னார் எமக்கு அளப்பரிய உதவிகள் புரிந்து தன்னால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீட்டில் என்னையும் குடும்பத்தினரையும் இருக்கும்படி அன்னாரும் அவரது துணைவியாரும் வற்புறுத்தி எம்மை அவ்வீட்டில் இருத்தி தங்களாலான சகல உதவிகளையும் செய்து இருவீடும் ஒரு வீடுபோல் வாழ்ந்து வந்தோம். அன்னாரது வீட்டில் இருக்கும் சமயம் எனக்கு குழந்தைச்செல்வங்களும் கிடைத்தது. அதை என்றும் எம்மால் மறக்க முடியாது. அவர்கள் செய்த உதவிகளோ சொல்லிலடங்கா....

இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து 1996ம் ஆண்டு நானும் மனைவி பிள்ளைகளும் மீண்டும் கடல் பாதையூடாக கிளிநொச்சியை வந்தடைந்தோம். அவ்வேளை அமரரது வீட்டிலும் காணியிலும் நூற்றுக்கு மேற்பட்டோர் அடைக்கலமாகியிருந் தார்கள். இருப்பதற்கே இடமில்லை. அவ்விடத்து அலரும் அமரரது மனைவி, பிள்ளைகளும் இன் முகத்துடன் எமை வரவேற்று வேண்டிய உணவுகள் கொடுத்து 'இங்கேயே இருங்கள் எங்கேயும் போக வேண்டாம்' எனக் கூறி சகல உதவிகளையும் செய்து கொடுத்தார்கள் . மீளவும் கிளிநொச்சியை இராணுவம் ஆக்கிரமிக்க தொடங்கிய வேளை நான் மாங்குளம் கனகராயன் குளத்திலும் அவர்கள் தச்சடம்பனிலும் பின்னர் மல்லாவியில் நாமிருவரும் ஒட்டன் குளத்தில் அருகருகே வாழ்ந்து வந்தோம். தினசரி அமரர் காலையில்வந்து சுகதுக்கம் கேட்டறிந்து தேவைகள் தொடர்பிலும் அறிந்து செல்வது வழக்கம்.

ஒட்டன் குளத்தில் இருக்கும் வேளை மூத்த மகளின் திருமணம் இனிதே கைகூடியது. அதற்கும் என்னாலான உதவியையும் ஒத்தாசை யையும் வழங்கினேன். 2000ம் ஆண்டில் மீளவும் கிளிநொச்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேறிய பின்னர் 2001ல் அமரர் இந்தியா சென்று சமய வழிபாடுகளையும் முடித்து இளைய மகளின் திருமணத்தை முடித்து கிளிநொச்சி வந்து தனது சொந்த மாளிகையில் வசித்து வரும்வேளை தனது இரண்டாவது மகன் கோகிலேஸ்வரனுக்கு துணைவியாரது அண்ணனின் மகளுக்கு திருமணம் செய்து வைத்தார். அமரர் காலை மாலை தவறாது தனது துவிச்சக்கரவண்டியில் கம்பீரமான தோற்றத்தில் கிளிநொச்சி நகரை உலாவருவது அன்னாரது வழமை. இவ்வாறான சூழ்நிலையில் காலன் அன்னார் மேல் குறிவைத்து அன்னாரை தன்னுடன் கூட்டிச் சென்று இறைபதம் சேர்த்தார். அன்னாரது இழப்பு எனது குடும்பத்திற்கும் அன்னாரது குடும்பத்திற்கும் பேரிழப்பாகும்.

அன்னார் போன்று ஒரு பெரியாரை காண்பது அரிது. அவரது ஆத்மா சாந்தியடைய சிவபூதராயரையும் கனகாம்பிகை அம்மாளையும் இறஞ்சி வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இப்படிக்கு
திரு திருமதி வி. சுப்பையா குடும்பத்தினர்
சித்தவைத்தியரும்,
ஓய்வு பெற்ற பொலிஸ் சாஜன்டும்.

கொடுப்பதற்கு எவை கடினமானவையோ அவற்றைக் கொடுப்பவன். எவை செய்வதற்குக் கடினமானவையோ அவற்றைச் செய்பவன் எவை எவை தாங்கிக் கொள்ள முடியாதவையோ அவற்றைத் தாங்கிக் கொள்பவன். தன் இரகசியங்களை உங்களிடம் கூறி உங்கள் இரகசியங்களை காப்பாற்றுவான். சிரமமான நேரங்களில் உங்களைப்புறக்கணிக்காதவன். நீங்கள் தாழ்ந்திருக்கும் நண்பனைாக்கிக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்த நண்பன்.

அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கே இறைவன் வாழ்கின்றான் என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்து இன்று வரை எம் நெஞ்சங்களில் நிறைந்து நீங்கா இடம் பிடித்தவர் தான் எனது நண்பன் உறவினன் திரு கந்தையா செல்லையா அவர்கள் அன்னாரின் மரணச் செய்தி கேட்டு மனம் அதிர்ந்தேன். திடீர் என ஒரு நொடிப் பொழுதில் இறைவனடி சேர்ந்து விட்ட துயரச் செய்தியை முதலில் என்னால் ஜீரணிக்க முடியவில்லை. ஈற்றில் இவ் உலகில் நிலையற்ற வாழ்வை எண்ணி நிம்மதியை வரவழைத்தேன்.

1970ம் ஆண்டு முதல் இவருடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது. 1986ல் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் கடமையாற்றிய பொழுது அளப்பரிய சேவைகள் செய்த உத்தமன் தனது இல்லத்திற்கு அழைத்துச் சென்று உணவு, உறைவிட வசதிகளை மிகச் சிறப்பாக ஒழுங்கு செய்தமையை என்னால் மறக்க முடியாது. 'இல்லாள்' என்பதற்கு இலக்கணமாக வீட்டு நிர்வாகத்தை திருவாட்டி செல்லையா பொறுமை யுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் மேற்கொண்டதனாலேயே திரு. செல்லையா அவர்களின் வேளாண் தொழிலும் தொண்டும் வளர்ந்தன. வளம் பெற்றன.

'தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது' என்ற முதுமொழிக் கேற்ப விவசாயத்தை தன் வாழ்க்கையின் ஆதாரமாக விரும்பி ஏற்றார். அமரர் செல்லையா. அடையா நெடுங்கதவுடையான் சடையப்ப வள்ளல் போல், இவரின் இல்லத்திலும் எந்நேரமும் விருந்தினர்கள் வந்து உணவு உண்டு மகிழ்ந்து சென்றதை நேரில் பார்த்தேன். நாட்டுப் பற்றாளர்கள், இளம் விடுதலை விரும்பிகள் போன்றோரை இன் முகத்துடன் வரவேற்று உபசரித்து மனமகிழ்வும் நிறைவும் பெற்றவர்.

தன் பிள்ளைகளின் கல்வியிலும் ஒழுக்கத்திலும் கண்ணும் கருத்துமாக இருந்து அவர்களை வளர்த்து ஆளாக்கி உற்றாரும் மற்றாரும் உவக்க நல்வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று இருந்தவர் இன்றில்லை என்பது தான் இந்த உலகத்தின் சிறப்பு. எனவே அன்னாரது இழப்பால் துயருற்றிருக்கும் மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர் போன்ற சகலருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

டாக்டர் ம. சந்திரசேகரம்.
முருகேச பண்டிதர் வீதி
சுன்னாகம்

| | |
|---|---|
| பெயர் | கண்டுபிடிப்பு |
| ஜோஇமஸ் சிம்ரன் | மயக்க மருந்து |
| மைக்கேல்பரடே | மின்சாரம் |
| மார்க்கோனி | வானொலி |
| செல்சியஸ் அன்றி | சென்ரிகிறேற் வெப்பமானி |
| பிளேமிங் | மலேரியா பரவுதல் |
| அல்பிரெட்நோபல் | டைனமைட் |
| ரொலமி | உலகப்படம் |
| நியூட்டன் | புவியீர்ப்புச் சக்தி |
| மேரிகியூரி அம்மையார் | ரேடியம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத நண்பன்

குடிப்பிறந்து தன்கண் பழிநாணுவானை
கொடுத்தும் கொளல் வேண்டும் நட்பு'

இறந்தும் இறவாப் புகழ் கொண்ட அமரர் கந்தையா செல்லையா அவர்களின் மரணச் செய்தி கேட்டுப் பேரதிர்ச்சியும் பெருங்கவலையும் அடைந்தேன்.

இளவயதிலிருந்து இருவரும் இணைபிரியாத நண்பர்களாய் கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளத்தோடு ஒரே கல்லூரியில் ஒரே வகுப்பில் படித்ததையும், பழகியதையும் என்றென்றும் மறப்பதற்கில்லை. பள்ளி மாணவர்களாக இருந்த காலத்தில் பெற்றோருக்குத் தெரியாமல் கள்ளமாய்ப் படம் பார்த்ததையும், கீரிமலைக்குச் சென்றதையும், திருவிழாக்கள், நாடகங்கள் பார்த்ததையும் என்னால் மறக்க முடியவில்லை.

இளமையில் முளைவிட்ட எமது நட்பு பெருவிருட்சமாகி அமரர் அவர்கள் இறைவனடி சேரும்வரை நல்லுறவாகவே ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றியது. சுதந்திரப் பறவைகளாய் யாழ் நகரின் எல்லா மூலை முடுக்குகளிலும் சுற்றித்திரிந்ததையும் ஆங்காங்கு கண்ட காட்சி களையும் அனுபவித்த சுகங்களையும் என்றும் மறக்க முடியாது. நட்பு என்ற விருட்சத்தின் பெரும் கிளை ஒன்று முறிந்து விட்டது. அதனால் கலங்குகின்றேன்.

இல்லறமென்னும் நல்லறவானில் இனிய ஆறு பிள்ளைகளைப் பெற்றெடுத்து அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். அதன் பயனாக இன்று நாலு பிள்ளைகள் வெளிநாடுகளில் சீரும் சிறப்பும் பெற்று வளமாக வாழ்கின்றனர். பிள்ளைகளோடு மருமக்களையும் பேரப்பிள்ளைகளையும் அரவணைத்து அன்பால் முழுக்காட்டியவர்.

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கிளிநொச்சியை வதிவிடமாகக் கொண்டவர் அங்குள்ள மக்கள் செய்த பெரும் புண்ணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றே கருத வேண்டும். கிளிநொச்சியில் வாழ்ந்தாலும் சுன்னாகம் கிழக்கின் ஊரியாட்டியில் எழுந்தருளியிருக்கும் அவர்களின் குலதெய்வ மான சிவபூதராயரின் கட்டிடங்கள், தேர் போன்றவற்றின் செலவினங் களுக்குத் தயங்காமல் தாராளமனப்பான்மையுடன் தமது பங்களிப்புக் களைச் செய்தார்.

ஏற்றத்தாழ்வின்றி எல்லோருடனும் எளிமையாகப் பழகி அனை வரினது உள்ளங்களிலும் அழியா உருப்பெற்றவர். சிறுவர் முதல் முதியோர் யாவருக்கும் அமரர் செல்லையா அவர்கள் செல்லமான பிறதர் (*Brother*) ஆனார். நாளடைவில் செல்லையா என்ற இயற் பெயர் மாறி பிறதர் என்றே எல்லோரும் அன்போடும் பண்போடும் அழைக்கலாயினர்.

நண்பனின் எளிமையான தோற்றம், இனிமையான சுபாவம் அயராத உழைப்பு ஆதரவற்றோரை அரவணைத்து அவர்களின் தேவைகருதி உதவிபுரியும் பரந்த மனப்பான்மை, சாதி, மத, பேதமில்லா சமத்துவப்போக்கு யாவும் அவர்களின் நற்பண்புகளாக விளங்கின. அதனால் கிளிநொச்சி வாழ் முக்கிய மனிதர்களுள் முதலிடத்தைப் பிடித்துக்கொண்டார்.

அமரரின் பிரிவால் துயருறும் பாசமிகு சகோதரர்களுக்கும் இனிய மனையாள், அருமைப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் துயரத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா இறைவனடி சேர்ந்து அமைதியும் சாந்தியும் பெற நாமும் அவனருள் வேண்டிப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி

இ. திருவிளங்கம்
ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
28.6.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் பரிசு.

என் இனிய நண்பன் திரு.க. காசிபப்பிள்ளை அவர் கண்ணன் போல் கறுப்பு. ஆனால் அவர் உள்ளமோ 'பால் வெண்ணிலா' அவரின் வலது கரம் தான் பிறதர் செல்லையா. அவர் மாயமாய் மறைந்து விட்டார். ஆம் அவரின் வலது கரம் வாழ்வு இழந்தது. 'உண்டி கொடுத்தோன் உயிர் கொடுத்தோன்' என்ற வாக்கியத்துக்கு அமைய எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்க அரசியலில் பொருளாதார நெருக்கடி காலத்தில் எமக்கும், எமது ஊர் நண்பர்களுக்கும் நெல் தந்து உதவிய உத்தமன் இன்றில்லை. ஆனால் அன்னாரின் உறவுப் பாலங்கள்' என் மங்கல வாழ்வின் விழுதுகள்' நன்றி கெட்டவன் நாயிலும் கடையவன் ஆகவே தான் 82 வயதிலும் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் அன்னாரின் இறுதிக் கிரியையில் பங்கு பற்ற வேணும் என்ற பேர் அவாவுடன் உங்கள் இல்லம் வந்தேன். அங்கு என் உள்ளம் அவர் 'இன்ப நினைவினால் அலை மோதியது' என் வாழ்வில் மறக்க முடியாத மறக்க முடியாத என் உள்ளம் வெள்ளம் போல் கலங்கியது. எனவேதான் யான் மனம் திறந்து மடல் போல பாசஉரை எழுதுகின்றேன்.

உறவுக்கு பாலம் அமைத்த உத்தமனே உள்ளத்துக்கு வெள்ளம் போல் என் இனிய நண்பனே ஆம் நீ! மறைந்து விட்டாய் ஆனால் உன் இனிய நினைவும் பண்பும் என்னைத் தாலாட்டுகின்றது. இது வார்த்தை ஜாலம் அல்ல. வறட்டுக் கௌரவத்துக்காக எழுதும் எழுதுகோலும் அல்ல. உன் குடும்ப சுன்னையம்பதி ஐயனார் கோவிலுக்கு நிலம் வழங்கிய குடும்பம். குலதெய்வமாக பாராட்டி மகிழ்ந்த குடும்பம். அற நெறிதான் அன்பு நெறி , தெய்வ நெறி தான் நீதி நெறி என்று நெறிமுறையில் வாழ்ந்த குடும்பம். அன்பனே! உங்கள் குடும்பம் 'ஒரு கதம்பம்' கதம்பத்தின் கட்டு அறுந்தது. ஆனால் உங்களின் எச்சங்கள் எங்கள் மங்கள வாழ்வின் விழுதுகளாக வாழ வேண்டும். வளர வேண்டும். வரலாறு படைக்க வேணும். என்று நினைப்பவன் யான். கண்டிப்பாக சுன்னையம் பதி ஐயனாரின் திரு அருள் குரு அருளாக மாறும் மாறும்!! வாழ்வு மலரும். ஆம் நீங்களும் நன்றே வாழுங்கள். உற்றார், உறவினர்களையும் வாழ வைத்து நீங்களும் வளமாக, நலமாக, வாழுங்கள்! வளருங்கள். இல் வாழ்வு வளைந்து வளைந்து செல்லும் பேர் ஆறுபோன்றது.எனவே இன்னல்கள் பல தோன்றலாம். கொடுப்பனவில் ஏமாற்றங்கள் எதிர் கொள்ள வேண்டி வரும். ஆனால் உதவிய குடும்பம் எப்பொழுதும் நோய் நொடி இல்லாமல் வழமாக வாழத்தான் செய்யும். வாழ்த்துடன் வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே வாழும். ஆயினும் எவன் ஒருவன் செய்த உதவியை மறந்து மறைத்து மாயப் பூனைபோல் வாழ்கின்றானே. – அவன் இக்கலியுகத்தில் கோட்டை கட்டலாம். கும்மாளம் போடலாம். ஆனால் அவன் வாழ்வு.... முடிவு மூத்திரக்குளவியின் கூடு போன்றது. ஒரு சில விநாடியில் தீயினால் மறையும்! மறையும்' என் அன்புள்ளங்களே வாட வேண்டாம். வருந்த வேண்டாம்' வெறுக்க வேண்டாம்!! எங்கள் செயல் அனைத்தும் பூர்வ ஜென்ம கர்மத்தின் அலகிலாவிளையாட்டு. பலனை நினைத்துப் பதறாதே. ஆனால் உன் பண்பை பேணிக் கொள் அது தான் உங்கள் மங்கள வாழ்வுக்கு விழுது.

மறவாதீர் சுயநலமும், பதவியும் அந்தஸ்தும் அதிகாரக் கதிரை யில் இருக்கும் வரை தான் கதிரையை விட்டு இறங்கினால் உன் அந்தஸ்து பூவிசிறிசாக மாறிவிடும்.

என் அன்புள்ளங்களே *(Computer)* கணனியுகத்தில் நேரமும், காலமும் மின்னல் வேகத்தில் நகர்கின்றன. பணம் தேடி பகட்டு வாழ்வு வாழ்ந்தவர்களின் இறுதி என்ன? பணம் ஏராளம், ஆனால் சலரோகம், தவிட்டு பாண் தான் தஞ்சம். பெரியகுடும்பம், பல்வகைச் செல்வம் ஆனால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. உரிய உணவும் கிட்டவில்லை. உனக்கு பணி செய்ய படுபாவியும் அக்கம் பக்கம் வரான் ஏன்? ஏன்?

மனிதனாகப் பிறந்தவன் மற்றவர்களின் துன்பத்தில் பங்குபற்ற வேண்டும். அறவழியில் ஒழுக வேண்டும்.நீங்கள் கருதும் பெரியவர் டாக்டராகவும் இருக்கலாம், பொறியியல் ஆழுராகவும் இருக்கலாம். அரசியல் தலைவராகவும் இருக்கலாம். ஆனால் எவன் ஒருவன் மற்றவர் களின் கஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் இறுமாப்புடன் வாழ்கிறானோ அவன் மனிதனல்ல. அவன் 'ஆணவத்தின் தீட்டுக்கல்' தான் தன் பெரிய வன் என்று அகந்தை கொண்டு வாழலாம். அவனுக்கு எல்லாம் இருக்கும். ஆனால் ஒன்று மட்டும் இல்லை இல்லை அது எது? அமைதியான ஆனந்தமான ஆரோக்கியமான வாழ்வு ஒரு பிரச்சனைக்கு முடிவு மட்டும் முக்கியமல்ல பின் பற்றும் அணுகுமுறையும் மிக மிக முக்கியம். இதற்கு எதிர் மாறாக எப்படியும் வாழலாம் என்று கனவுடன் வாழும் கனவான்கள் பிரச்சனை எதிர் கொள்ள முடியாமல் ஆமை போல் தன் உறுப்புக்களை உள் இழுத்து மறைக்கின்றனர். வாழ்வே மாயம் உலகே மாயம் என்று வறட்டுக் கௌரவத்தால் வாழ்பவர்களின் வாழ்வு வைக்கோல் பட்டடை மாட்டுக்குச் சமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன் சொல்லால் அன்றி இயனீர் வியனுலகம்" வன் சொல்லாம் என்றும் மகிழாது அன்பாக நேசித்து பண்பாக வாழுங்கள். வளருங்கள். ஆகவே என் அன்புள்ளங்களே மற்றையவர்களின் துயர் துடைக்கும் தும்புக் கட்டாக மாறுங்கள். தும்புக் கட்டுக்கு குஞ்சம் கட்ட ஒருவரும் வர மாட்டார்கள். இது தான் என் இனிய வாழ்வில் இனிய சங்கீத கீர்த்தனம்.

யான் அறிஞர்களை சந்தித்திருக்கிறேன். அவர்களுடன் பந்தி போசனங்களிலும் கலந்துள்ளேன். ஆனால் ... யான் அறிந்த உண்மை இது. :-

பெண்களின் பட்டுப்பாவாடைக்குள் மறைந்திருந்து பட்டாசு கொழுத்தும் பரதேசிகளாய் தான் இருக்கிறார்கள். ஏன்? ஏன்? பெரிய பதவி எப்படியும் ஊழலின் விளைநில மாகத்தான் காட்சி அளிக்கின்றது. இது எனக்கு அநுபவம் கூறும் அறுதி அறிவுரை. நிற்க மறைந்த திரு. செல்லையாவின் கண்ணீர் அஞ்சல் அட்டைகள் பெற்றேன். நல்லதைச் சொல்ல வேண்டும் நல்லதை நினைக்க வேண்டும் என்பதற்காக யான் விரும்பிய கண்ணீர் அஞ்சலியை மீண்டும் உங்கள் திருக்கரங்களில் உலாவவிட வேண்டும். என்பதற்காகத் தருகிறேன். மன்னிக்கவும்.

**மாதகல் நண்பர்கள்**

கனவுகளைத் தொலைத்து விட்டோம் – உம் வரவுகளைத் தேடி
கடமைகளைத் தொலைத்து விட்டோம் – எம் உணர்களைத்தேடி
நிம்மதியைத் தொலைத்து விட்டோம் – உம் நினைவுகளைத்தேடி
கடைசிவரை தொலைவதில்லை – எம் கண்களில் ஈரம்.

**கனகபுர மக்கள்**

எங்கள் பிறதர் செல்லையாவே
தங்கள் பிரிவால் ஊரும், உறவும்
நண்பர்களும், சுற்றமும் கதறி அழுதிட
தங்கள் பாதம் தொட்ட வீதிகள்
உங்களை அனுப்பும் பாதைகளாக
மாறியதையிட்டு மனம் பதைக்குதே
எம் மக்களின் கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாகத் தூவுகின்றோம்.

இப்படிக்கு
(ஐயனார் ஊர் பிரியன்
N. செல்வத்துரை)
*Dr. N. Selvadurai B.A, Homco Pathy*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானுறையும் வள்ளலார் எனது அரிய நண்பன்

கிளிநொச்சி மக்களால் பிறதர் BROTHER எனச் செல்லமாகவும் பண்போடும், பாசத்தோடும், பெருமையோடும் அழைக்கப்பட்ட இணை பிரியா நண்பன் செல்லையாவின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்தேன். கடந்த அறுபது வருடங்களாக உடன்பிறவாச் சகோதரனாய், அயலவனாய், அரிய நண்பனாய் இருந்து எமது இன்பத்திலும் சமபங்கேற்று ஆறுதல் அளித்துக் காலமெல்லாம் கீர்த்து வாழ்ந்த ஓர் உன்னதப் பிறவியை பிரிந்து இதயம் சோகத்திலும் துயரத்திலும் வெந்து வெடித்துக் கண்ணீராக வடியக் கலங்கி நின்றேன்.

நெஞ்சை விட்டுஅகலாத நினைவுகள் ஒன்றா? இரண்டா? எடுத்துச் சொல்ல இளமைப் பருவத்தில் இருந்து இறையடி எய்தும் வரை அமரர் அவர்கள் எனது அன்பிற்கும் பண்பிற்கும் உரிய அரிய நண்பன்.

இன்முகம், இனிய சுபாபவம், மனித நேயம், சமூக உணர்வுகள் முதலிய உயர் பண்புகளை தமதாக்கி வாழ்வோர் ஒரு சிலரே. அப்படியானவர்களில் ஒருவர் தான் நண்பன் செல்லையா அவர்கள். தலைமைத்துவமும், ஆளுமையும் மிக்க நண்பன் அவர்கள் தனக்கென வாழாது பிறருக்காகத் தன் பொருள், உடல், ஆவி மூன்றையும் அர்ப்பணித்து பிறதர் (BROTHER) என்ற பட்டப்பெயரையும் பெற்றுக் கொண்டவர். சமூகத்தில் எங்கெங்கு பிரச்சினைகளும், பிரிவினை களும் சண்டை சாச்சரவுகளும் ஏற்படுகின்றனவோ அங்கங்கெல்லாம் சென்று சமரசம் பேசித் சமாதானத்தை ஏற்படுத்துவதில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து வெற்றி காண்பதில் பெருமையும் பெரு மகிழ்ச்சியும் அடைந்தவர். தனது தன்னலமற்ற சமய சமூக நல சேவை களில் மக்கள் மனங்களில் நிறைந்து ஒரு நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டவர்.

"சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி, இனம் என்னும் ஏமப்புணையைச் சுடும்" என்ற பொய்யா மொழியாரின் பொன் மொழிக்கொப்ப எவருடனும் சினந்து கொள்வதை நாம் ஒரு நாளும் கண்டதில்லை. துன்பம் வருங்கால் நகுக என்ற முது மொழிக்கமைய சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களில் மழையின்மையாலும், பெருவெள்ளத்தாலும் நெற்பயிர்கள் அழிந்து பெரு நட்டம் ஏற்பட்டாலும் அதை எண்ணிக் கலங்காதவராய் இறைவனதும் இயற்கைகளினதும் நியதிப்படியே நடக்கின்றது எம்மால் எதுவும் செய்ய முடியாது" என்று சொல்லிச் சிரிப்பார்.

அன்பிற்கு இலக்கணமாய், அறிவுரையில் பெருந்தகையாய், பண்பிற்கு உத்தமராய் உற்றார் உறவினர் நண்பர்களுக்கு உறுதுணை யாய் இருந்து பெற்ற பிள்ளைபோல் அரவணைத்து ஏற்றத்தாழ்வின்றி அனைவருடனும் சகோதரனாகப் பழகி எல்லோர் நெஞ்சங்களிலும் நீங்கா இடம் பெற்று வாழ்ந்த பெருந்தகை இன்று எம்மத்தியில் இல்லை. சித்தம் கலங்கி நிற்கின்றேன். சொல்லி அழ வார்த்தையின்றி நண்பன் நான் சொல்தேடி அலைகின்றேன்.

மனதை விட்டகலாத இனிய தோற்றம், பேச்சுக்கிடையிடையே புன் சிரிப்பும் கலகலப்பு, சுறுசுறுப்பும் விடாமுயற்சியும் எடுத்த கருமத்தைத் தொடுத்து இனிது முடிக்கும் ஆற்றல் இல்லத்திற்கு வருவோரை இன்முகத்தோடு உளம் கனிய உபசரித்து விருந்தோம்பி வழியனுப்பும் பண்புடையானாய் விளங்கினார்.

பிறந்தவர் மண்மேல் இறப்பது திண்ணம். படைத்தவனே பறித்தெடுக்கும் போது என்ன செய்வோம்? யாரை நோவோம்? யார்க்கெடுத்துரைப்போம்? ஈடுசெய்யமுடியாத பேரிழப்பால் கலங்கி கண்ணீர் விட்டு நிற்கும் உடன் பிறப்புக்களுக்கும் இனிய மனையாள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் ஆகியோருக்கு மட்டுமல்ல அவர்களுடன் உறவாடிய உள்ளங்கள் அனைத்திற்கும் எமது உளம் நெகிழ்ந்த ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியும் அமைதியும் பெற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக!

*" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்.*

*சுன்னாகம் கிழக்கு,* *அன்பன்*
*24.06.2005* *தம்பித்துரை*
*ஓய்வு பெற்ற ஆசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எம் நினைவில்

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பல நல் இதயங்களில் பதிந்து விட்டு திரு.க. செல்லையா அவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். திரு. செல்லையா அவர்கள் தூய்மை யான மனம் படைத்தவர். எல்லோரிடத்திலும் மிகவும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் பண்பு கொண்டவர். உற்றார், உறவினர், ஊரார் அனைவருடனும் உறவாடி வாழ்ந்தவர். எல்லோருக்கும் (பிறதராக) சகோதரனாக வாழ்ந்தவர்.

மரணம் என்பது எல்லோரது வாழ்விலும் தவிர்க்க முடியாத ஒன்று என்பதை யாம் அறிந்தும் சிலரது மரணங்களை மனம் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது. காரணம் அவரதுமுன்னுதாரணமான வாழ்க்கை முறைகள் அவர்களின் ஆனந்த இல்லத்தில் வான்மதி போன்று காட்சி அளித்து வாழ்ந்தவர் இன்று இறைவனின் விதியால் இவ்வுலக வாழ்வை இடையில் முடித்துக் கொண்டார். விதி வலிது என்பதை யாவரும் அறிவோம்.

நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்
பெருமை உடைத்து இவ் உலகு

என்று இப்புவியில் வாழும் காலத்தில் இனியவற்றை செய்து வாழ்ந்த அவரின் வாழ்வானது மகத்தானது. இன்னிலையில் அவரின் பிரிவுத் துயரால் துயருறும் அவரது துணைவி யார், பிள்ளைகள், உற்றார், உறவினர்களிற்கு எனது ஆழ்ந்த அனுதாபத் தையும் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சு. பசுபதிப்பிள்ளை
கிராம அலுவலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவகும் வரை நீங்காத பிறதர்

கந்தையா செல்லையா (பிறதர்) இவர் கனகபுரம் குழு வாழ்க்கை பண்ணையின் ஆரம்ப முன்னோடிகளில் ஒருவர். முதலாம் பண்ணையில் நவமணிகளில் ஒருமணி இவர். யாழ்ப்பாணத்தில் சுன்னாகம் பகுதியில் பிறந்து வளர்ந்ததால் வாலைப் பருவத்திலேயே கமத்தொழிலில் ஈடுபாடு கொண்டவர். இவர் தனது இளமைக்கால அனுபவங்களினால் கனக புரத்தில் நல்ல தரமான கமக்காரனாவும் அதையும் விட கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் வேளாண்ன்மையிலும திறம்பட செய்து வந்த ஓர் பெரும் கமக்காரன்.

இவருடைய கனகபுரம் வருகை விவசாயத்தை முன்னிட்டதாக அமையப்பெற்றது. தனது உழைப்பு, சக்தி இருக்கும் வரை கமத் தொழிலையே உயிர் மூச்சாக செயற்பட்டதும் அல்லாது தனது வருவாயில் ஒரு பகுதியை ஆலயங்கள், சனசமூக நிலையங்கள் வளர்ச்சியடைய உதவிகள் செய்து வந்துள்ளார். அது மட்டுமல்ல நீண்ட கதை கதைக்க மாட்டார். அவரிடம் இருந்து ஒரு சில வார்த்தைகள் தான் வெளியே வரும். அவை நியாய பூர்வமாகத்தான் இருக்கும். யாரும் மறு பேச்சு பேச முடியாது. இவரை நாம் இழந்தது பேர் இழப்பு. இவ் இழப்பானது அவரது குடும்பத்தினருக்கு துயரைக் கொடுக்கும் என்பதில் ஐயம் இல்லை. ஆனால் மனிதன் பிறக்கும் பொழுது இறப்பும் கூடவே உண்டு என எண்ணி அவர் எந்த இடத்தில் தனது பணியை விட்டு சென்றாரோ அதே இடத்தில் இருந்து மீண்டும் பணியை தொடர வேண்டும் என அவர் குடும்பத்தினரை வேண்டிக் கொண்டு அவருடைய ஆன்மா சாந்தியடைய வேண்டிக் கொள்கின்றேன்.

இப்படிக்கு
சி. கனகேந்திரம்
தலைவர்
சிறிகாந்தா சனசமூக நிலையம்
கனகபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக சமய சேவையாளர் அமரர் கந்தையா செல்லையா (பிறதர்) அவர்கள்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கனகபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட பிறதர் திரு. கந்தையா செல்லையா அவர்கள் அமரான செய்தி கேட்டு அவலக் குரல் எழுப்பி கலங்காதவர் எவருமில்லை.

கனகபுரம் படித்த வாலிபர் மேட்டு நிலக் குடியேற்றத்திட்டம் 1958ம் ஆண்டு அமரர் மா.ஸ்ரீகாந்தா (முன்னாள் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர்) அவர்களின் பெருமுயற்சியால் ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக வளர்ச்சியடைந்த பதினேழு பண்ணைகளைக் கொண்ட ஒரு நீண்ட கிராமமாக கிளிநொச்சி பிரதேசத்தில் பிரசித்திகொண்டதை யாவரும் அறிவார்.

மேற்படி குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் ஒவ்வொரு பொறுப்பும் வழங்கப்பட்டது. விவசாயத்துறையில் இவர் காட்டிய ஈடுபாட்டைக் கண்ட அவரது நண்பர்கள் விவசாயத்துறைக்குப் பொறுப்பாக நியமித்தார்கள் அவர் ஆரம்ப காலம் தொடர்ந்து இறுதிக்காலம் வரைக்கும் விவசாயத் துறையில் தனது திறமையைச் காட்டி விவசாயத்துறையில் புகழ் பெற்று விளங்கினார்.

அவர் இளைஞராக இருந்த காலம் தொட்டே சமூக சமயத் தொண்டுகளில் அதிக ஈடுபாடு உடையவராக விளங்கினார். கிளிநொச்சி கனகாம்பிகை அம்மன் ஆலய கொடியேற்றத் திருவிழாவும், முருகன் ஆலயத்தில் தீர்த்தத் திருவிழாவும், வருடா வருடம் கனகபுரம் மக்களால் நடாத்தப்பட்டு வருகின்றன. அந்த திருவிழாக்களை சிறப்பாகவும் ஒழுங்கு முறைப்படியும் நடாத்தவதற்கு தன்னால் இயன்ற பங்களிப்பை ஆரம்பகாலம் முதல் இறுதிக்காலம் வரை நிறைவேற்றி வந்துள்ளார். வீட்டுக்கருகில் இருக்கும் கிருஸ்ணர் ஆலயத்தில் திருவெம்பா பூசை யையும் செய்து வருகிறார்.

அவர் கனகபுரத்திலுள்ள சகல பொது அமைப்புக்களோடும் இணைந்து திறம்பட சேவையாற்றி எல்லோராலும் மதிக்கப்பட்டு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பொது அமைப்புகளின் வளர்ச்சிக்கும், பொது மக்களின் முன்னேற்றத்திற்கும், அயராது பாடுபட்டு வந்துள்ளார்.

இவரைப் பின்பற்றி இவரது பிள்ளைகளும், சமூக, சமயத் தொண்டுகளில் ஈடுபட்டுவருவது பாராட்டுதற்குரியது. கனகபுரம் கிராம மட்டத்தில் நடைபெறும் பொது நிகழ்ச்சிகளுக்கு மட்டுமல்லாது மாவட்ட மட்டத்தில் நடைபெறும் பொது நிகழ்ச்சிகளுக்கும் தன்னாலான பொருளுதவி உடல் உழைப்பு என்பவற்றை இறுதிக் காலம் வரை செய்து வந்துள்ளார்.

அவரின் பிரிவுத்துயரால் துயருறும் அவரது துணைவியார், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், நண்பர்கள், உற்றார், உறவினர்களுக்கு எனது சார்பாகவும், கனகபுரம் மக்கள் சார்பாகவும், ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! ஓம்சாந்தி ! ஓம்சாந்தி !

***திரு. அ. கனகரத்தினம்***
***தலைவர்,***
***கிராம அபிவிருத்திச் சங்கம்,***
***கனகபுரம்.***

**இயற்கை எனது நண்பன். வாழ்க்கை எனது தத்துவாசிரியன். வரலாறு எனது வழிகாட்டி பயம் என்பது பலவீனத்தின் வெளிப்பாடு. கோழைத்தனத்தின் தோழன். உறுதிக்கு எதிரி. மனித பயங்களுக்கெல்லாம் மூலமானது மரணபயம். இந்த மரணபயத்தைக் கொன்று விடுபவன் தான் தன்னைவென்று விடுகின்றான். அவன் தான் தனது மனச் சிறையிலிருந்து விடுதலை பெறுகின்றான். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் போராட்டமே எனது வாழ்க்கையாகவும் வாழ்க்கையே எமது போராட்டமாகவும் மாறிவிட்டது. மனிதர்களின் இரும்பை விட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது.**

**தேசியத் தலைவர் வே. பிரபாகரன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவிலிருக்கும் எங்கள் பிறதர்

கனகபுரம் கிராமத்தில் அமரர் திரு கந்தையா செல்லையா (பிறதர்) அவர்களை அறிந்திராதவர்கள் எவரும் இருக்க முடியாது. ஏனெனில் இவர் இக்கிராமத்தில் இயங்கும் கிராம அபிவிருத்திச் சங்கம், விளை யாட்டுக் கழகம், சனசமூக நிலையம் மற்றும் பொது அமைப்புக்கள் ஊடாக ஆற்றிய சமூக சேவையே காரணமாக அமைந்துள்ளது. இதனாலேயே இவரை எல்லோரும் அன்பாக செல்லையா பிறதர் என அழைத்து வந்தனர். அதற்கு வரைவிலக்கணமாகவே எல்லோருடனும் பிறதராகவே பழகினார். விளையாட்டுக்கழகம் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பலம் வாய்ந்த கழகமாக திகழ்வதற்கு இவரும் பெரும் பங்காற்றினார். அதனைத் தொடர்ந்து தமது பிள்ளை களை கனகபுரம் விளையாட்டுக் கழகத்தில் சேர்த்து கிளிநொச்சியில் முன்னிலைக் கழகமாகத் திகழ்வதற்கும் ஒத்துழைத்தார். தற்போது இக்கழகத்தில் உபதலைவராக இருக்கும் இவரது மகன் திரு S. கோகிலேஸ்வரன் இக் கழகத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வரும் அமரர் கந்தையா செல்லையா (பிறதர்) அவர்களின் வழிகாட்டுதலே ஆகும்.

எமது கழக மைதானத்தை செப்பனிடுவதற்காக இரவது உழவு இயந்திரத்தை முழுமையாகத் தந்துதவியதன் மூலம் இம்மைதானம் சிறந்த மைதானமாக விளங்குவதற்கு ஒத்துழைத்தார். அத்துடன் இடம் பெயர்ந்த காலப்பகுதியில் கனகபுரம் கிராம மக்களுக்காக தனது அயராத சேவையை வழங்கினார். அத்துடன் கனகபுரத்தில் வாழ்ந்த காலப் பகுதியில் தனது கிராமத்தின் வளர்ச்சிக்காக கிராம அபிவிருத்திச் சங்கம், கனகபுரம் விளையாட்டுக் கழகம், கனகபுரம் சனசமூக நிலையம் ஆகிய வற்றுடன் இணைந்து செயற்பட்டு வெற்றியும் கண்டார். இவரின் சமூக சேவைக்கும் சிந்தனைக்கும் உறுதுணையாக இருந்து ஊக்கமளித்த இவரது துணைவியார், பிள்ளைகள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்ப துடன் இவரது பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு இவரது ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அ.றெஜிஅலோசியஸ்**

**செயலாளர்**

**கனகபுரம் விளையாட்டுக் கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுதொன்றை இழந்து விட்டோம்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மூத்த கிராமங்களில் ஒன்றான கனகபுரம் கிராமம் முன்னாள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மா. ஸ்ரீகாந்தாவினால் 1958ம் ஆண்டு வித்திடப்பட்டு முளைவிடத் தொடங்கியது. இன்று பெரியதொரு ஆலவிருட்சமாக நிமிர்ந்து நிற்கிறது. இந்த விருட்சம் பதினொரு பண்ணைகளையும் தனது கிளைகளாகப் பரப்பி வியாபித்து நீண்ட கிராமமாக விளங்குகின்றது.

இந்த கிராமத்தின் முதலாவது கிளையே முதலாம் பண்ணையாகும். உண்மையிலேயே முதலாம் பண்ணையே இக்கிராம உருவாக்கத்தின் முதற்படியாகும். இன்று இப்பண்ணை கிளிநொச்சி மாநகரின் எல்லைக்குள் அடங்கிய நகர்ப்பகுதியாக வளர்ச்சியுற்று விளங்குகின்றது. இந்த வளர்ச்சிக்கும், சிறப்புக்கும் அடித்தளமாய் அமைத்தவர்கள் அமரர் செல்லையா பிறதர் போன்ற மூத்த ஒன்பது சிற்பிகளாவர்.

முழு வன்னிக் காடாக விளங்கிய இப்பகுதியை செதுக்கி நகரப் பகுதியாக மாற்றிய சிற்பிகளில் முன்னோடியாக விளங்கியவர் அமரர் கந்தையா - செல்லையா ஆவார்.

யாழ்ப்பாணத்தின் வரலாற்றுப் பெருமைமிக்க ஊர்களில் ஒன்றான சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தான் வாழ்ந்த கனகபுர கிராம மக்களுடன் சகோதர உணர்வுகளுடன் ஒன்றாக கலந்து வாழ்ந் தமையால் கனகபுர வாழ் மக்களால் செல்லையா பிறதர் என உரிமை யோடும் பாசத்தோடும் செல்லமாக அழைக்கப்பட்டவர். இவர் தான் வாழ்ந்த கிராமத்தில் பாடசாலைகள், ஆலயங்கள் போன்ற பொது அமைப்புக்களின் வளர்ச்சிக்கு ஊக்க சக்தியாய் இருந்து பொதுத் தொண்டாற்றியவர்.

இன்று இவர் ஆற்றிய சேவை வழி நின்று அவரது மக்கள் கனகபுரம் மாதர் அபிவிருத்திச் சங்கம், கனகபுர விளையாட்டுக் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற சமூக அமைப்புக்களில் இணைந்து தமது பொது நல சேவையை எமது கிராமத்திற்கும் மாவட்டத்திற்கும் ஆற்றி நிற்கின்றனர்.

இக்கிராமத்தை உருவாக்கிய மூத்த சிற்பிகளை ஒவ்வொன்றாக இழந்து வரும் வேளையில் அமரர் செல்லையா பிறதரின் இழப்பும் பேரிழப்பாக அமைந்துள்ளது.

கனகபுரம் கிராம மக்களும், கனகபுரம் மாதர் அபிவிருத்திச் சங்கமும் இக்கிராமத்தைத் தாங்கி நின்ற விழுதுகளில் ஒன்றை இழந்து தவித்து நிற்கின்றது.

இவ்வேளையில் எனது அன்புத் தந்தையை இழந்து ஆறாத்துயரில் மூழ்கி இருக்கும் எமது கனகபுரம் கிராம மாதர் அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினரான திருமதி ர. செல்வநாயகி அவர்களுக்கும் அன்னாரது மனைவி, மக்கள், உறவினர்கள், கனகபுரம் வாழ் மக்கள் ஆகியோருக்கும் ஆறுதல் கூறி ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கிறோம்.

**கனகபுரம் மாதர் அபிவிருத்திச் சங்கம்,**

**கனகபுரம்,**

**கிளிநொச்சி.**

**28.06. 2005**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த நினைவுடனே

எமது கல்லூரியின்
ஆரம்ப அபிவிருத்தி வேலைகளின்
முன்னோடிகளுள் ஒருவராகச்
திகழ்ந்தவரும் பாடசாலை அபிவிருத்திச் சங்க
சங்க முன்னாள் உறுப்பினராகவும்
இருந்த கந்தையா செல்லையா (பிறதர்)
அவர்களின் பிரிவால் நாமும்
துயரடைகின்றோம் சமூக தொண்டுகளில்
தன்னையும் இணைத்து வாழ்ந்த
தன்னலமற்ற இந்த ஆத்மாவை
நாமும் அஞ்சலி செய்கின்றோம்.

அமரர் தனது பிள்ளைகளை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கல்வி கற்றுவித்து ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும் கற்று சமூகத்தில் திகழ்கிறார்கள். இந்த கல்லூரியின் வளர்ச்சிக்காக விளையாட்டு மைதானம் ஒன்றை அமைக்க 1986ம் ஆண்டு தன்னிடம் இருந்த உழவு இயந்திரம் மூலம் அதனை செப்பனிட்டு கொடுத்தார். கல்லூரியில் நடைபெறும் விளையாட்டு நிகழ்வின் போது (மெய்வல்லுனர் போட்டி) கொட்டகை அமைப்பதற்கான உபகரணங்களை வருடா வருடம் கொடுத்தும் தனது உதவிகளை செய்துள்ளார். இக் கல்லூரியில் படித்த பிள்ளைகள் கோணேஸ்வரன், செல்வநாயகி தவநாயகி கோகிலேஸ்வரன் செயலாளர் (பழைய மாணவர் சங்கம், மத்திய கல்லூரி) தவனேஸ்வரன், இராஜநாயகி மனைவி, மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

மரணத்தை வென்று முடித்து
வெளியேறி வந்தவர்கள்
வையகத்தில் யாருமில்லை
வாழ்வின் முடிவுரையே
மரணம் என்பதனால்
மனநிறைவடைகின்றோம்.

**பழைய மாணவர்கள்**
**கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி மறப்பது?

ஐம்பதுஐந்து ஆண்டுகள் ஆன
எம் நாட்டின்
அண்ணர் செல்லையா
ஆண்டவனடி அடைந்த
செய்தி கேட்டு
ஆறாத் துயராய்
என் குடும்பத்துடன் – நான்
வேரோடி நின்றேன்.

'பிரதர்' என செல்வமாய்
பிறர் மனம் நோகா வெல்லமாய் – கிளிநகர்
கவர்ந்த உத்தமனாய்
பேரெடுத்த என் நண்பனே!
என்னுடன்,
மலர்ந்து மணம் பரப்பி
கலந்திருந்து கதைகள் பலபேசி
புலர்ந்த உன் பொன்னான
நட்பு நாட்களை,
இடையில் நிறுத்தி – நீ
இறைபதம் எய்திவிட்டதை
எப்படி மறப்பது?

இன்று
என் மனதில்
சிலையாகிப் போன உம்மை,
என்றும்,
என் தலை
நிலம் சாய்த்து
உன் நினைவு சுமந்தபடி ......

நட்புள்ளம்
நாதன் (மிளகாய் நாதன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பும் - பிறப்பும்
## கண்ணீர்

எண்ணமெல்லாம் நீயாகி
நினைவெல்லாம் நிழலாக
மண்ணிருந்து விண்ணிற்கு
மாற்றாகிச் சென்ற கோவே!
உண்மையின் உருவே ஊருக்குஒளியே
செம்மையே செய்த சிறிய நண்பா
பண்பும் பகுத்துணர்வும் வரமாக வாய்க்க
விருந்தோம்பி மகிழும் வள்ளலே
தேடிய வாழ்வும் ஓடிய காலமும்
உறவும் உற்றோரும் பெற்றோரும்
நற்றோரும், கற்றோரும், கல்லாதோரும்
போற்ற, நல்லதே செய்த செம்மலே
செல்லையா – பிறதரே!
நீ – செல்லையா என்று
நாம் – வழியனுப்பாதிருந்தகாலை
மாறி – நீ சென்ற தென்ன நீதியோ!

சுடர் விடுபரிதியும் சுக்கு நூறாகுமோர் நாள்
படர் வினை நீங்கிடாது பரத்தின் நியதி –கண்டாய்
மாறிலா வினையின் தாக்க் நீ மறுபடி பிறக்க
மீண்டும் மண்ணிடை வருவாய் விரைந்து

இறப் பென்பது இனிமையானது உயர்நிலைக்கு இட்டுச்
செல்வது ஆத்மா பிறிதொரு உடலிற் செல்ல மர
ணமே வாசல் உயர் பதவிக்குச் செல்வது உடல் அல்ல
ஆத்மா அழிவதில்லை, மரணம் அற்றது எனவே
நாம் ஆறுதல் வெறுவோம் –

அன்புடன்
பு- சண்முகநாதன் (மிளகாய் நாதன்)
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் ....

அன்பாலும், பண்பலும் எங்கள் நெஞ்சங்களில் என்றும் நின்று நிலைத்துள்ள கிளிநொச்சி கனகபுரம் கிராமத்தின் மூத்த குடிமகனாக விளங்கியவருமான அமரர். செல்லையா அவர்ளின் மறைவுச் செய்தி கேட்டு தாங்கெணாத் துயரமடைந்தேன். எல்லோருடனும் நற்பண்புடனும் அன்புடனும் சாந்தமான இனிய முகத்துடனும் பழகி வந்த பிறதர் செல்லையா இன்று எங்கள் மத்தியில் இல்லை. அன்னாரை நான் சிறந்த விவசாயியாக, சமயத் தொண்டராக, மக்கள் சேவகனாகக் கண்டேன். அவர் என்னுடன் பழகிய காலங்கள் நீண்டதாகும். நான் கிளிநொச்சி கனகபுரத்தில் குடியேறிய காலத்துக்கு முன்னதாகவும் எனது வர்த்தக நிலையம் கிளிநொச்சி நகரில் அமைந்த காலப்பகுதியிலும் அதனைத் தொடர்ந்து அவர் இறைபதம் எய்தும் வரை என்னுடனே இருந்தார். அவ்வேளையில் அவரது ஆக்கபூர்வமான ஆலோசனைகள், ஒத்துழைப் புக்களை என்னால் மறக்க முடியாது. இவர் சுன்னாகத்தை பிறப்பிட மாகக் கொண்ட போதும் கிளிநொச்சியை வதிவிடமாக கொண்டு பல்லாண்டுகள் வளமுடன் வாழ்ந்தார் விவசாயத்தில் தலைசிறந்த விவசாயியாக திகழ்ந்தார். இவர் கிளிநொச்சி கிருஷ்ணர் ஆலயம், அருள்மிகு முருகன் தேவஸ்தானம், இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயம், கிளிநொச்சி பழைய பஸ் நிலைய பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டவராக விளங்கியுள்ளார். தொண்டுகள் பல மக்களுக்காக ஆற்றி மறைந்த செல்லையா பிறதர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன், எம் நெஞ்சிருக்கும் வரை அன்னாரின் நினைவுகள் என்றும் இருக்கும்

சுபம்

**திரு. உதயகுமார்**
**உதயன் புத்தகநிலையம்**
**திருநகர் வீதி,**
**கிளிநொச்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்

வேதனை கலந்த வேளையிலே – நாங்கள்
ஓடோடி வரும் போது – உங்கள்
அன்பு கனிந்த முகம் – எங்கள்
வேதனை தீர்த்ததையா.....

வள்ளுவன் வாசுகிபோல் வாழ்ந்த தலைவா
உங்களைப் பிரிந்து தவிக்கிறோம் – எங்கள்
அன்பு மாமியை பிரிந்து செல்ல – உங்களுக்கு
மனமும் வந்ததோ ......

அன்புத் தந்தையாய் கண்டிப்புடன் கூடிய
ஆசிரியனாய், இனிய தோழனாய்
தேசப் பற்றாளனாய் உலகிற்கு
காட்டீனீரே உத்தமரே

பண்ணையிற் சோதி மறைந்ததுவே
எங்கள் மனம் பதைக்குதையா
ஆறாத் துன்பத்தில் ஆழ்ந்துள்ளோம்
மீளாது சோகத்தில் வாழ்கின்றோம்

வேதனை கலந்த வேளையிலே
அன்பு கனிந்த பார்வையே
எங்கள் வேதனை தீர்த்ததுவே

**திருமதி முத்தையா கோபால் குடும்பம்**
**திருமதி இந்திரகுமார் சீதலக்ஷ்மி குடும்பம்**
**உதயநகர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய தாபகர்**
**நா. தம்பிராசா குடும்பம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டுகள் கடந்தாலும் அழியாது எம் பாசம்

திசைகள் தெறிக்கும் பொழுதுகளில் ஒவ்வொரு
நாட்களும் ...... நித்தமும் விடிகின்ற நேரம் .....
எங்கள் .... வீட்டு முற்றத்தில் இனிய குரல்
ஒன்று கேட்கும் அது .... எங்கள் பிறதர் மாமா.

மாமா!
சிறுவயது முதல் உங்கள் வார்த்தைகளை
கேட்கின்றோம் எந்த வார்த்தையும்
உங்கள் வாயால் சொல்லும் போது.....
மதிப்புடையதாகி விடுமே ....
அந்த வாய் இன்று வார்த்தைகளைக்
கூறாமல் மௌனமாகிப் போனதோ!

மாமா!
வீடும் உறவும் நட்பும் விம்மியழ.....
உங்கள் பாதம் பட்ட வீதிகள் – இன்று
உங்களை பயணமனுப்பும் பாதைகளாக.....
நீங்கள் 1958 தொடக்கம் அப்பாவுடன்
ஒன்பது பேர் கூடி ஒரு காலத்தில் உண்டு
ஒன்றாய் உறங்கி – அப்பாவால் என்றும் அழியா
பிறதர் எனும் நாமம் பெற்று இன்று வரை
வாழ்ந்திட்ட சோலைக் கிராமம் –
கோழிப்பண்ணை கனகபுரம் வீதி ....
இறுதிப் பணயம் அனுப்பும் போது
நெஞ்சம் வெந்ததையா!

என்றும் எங்கள் இதயங்களில்
ஒளிப்படமாய் வாழ்ந்து கொண்டிருக்கும்
எங்கள் பிறதர் மாமாவின்
ஆத்மா சாந்திக்காக......
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

செ. செல்வன்
6, கனகபுரம்
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நீங்கா நினைவலைகள்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கனகபுரம் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட அமரர் கந்தையா செல்லையா (பிறதர்) அவர்கள் அன்பே உருவான சாந்த குணம், தன்னடக்கமும், தன்னம்பிக்கையும், தெய்வ அனுகூலம் மிக்கவருமான ஒரு பெரியாராவார். அவருடன் ஓர் குறுகிய காலம் பழக எனக்கு வாய்ப்பு ஏற்பட்டது.

அவ் வாய்ப்பின் பயனாக அவரிடமிருந்து நான் கற்றுக் கொண்டவை மலைபோல் ஆகும். எனது விவாக நேரத்திலும் நான் நோயுற்றிருந்த வேளையிலும் அவர் காட்டிய அன்பு, தயவு, தட்சனை, உபசரணைகள் யாவும் என்றும் மறக்க முடியாதவை.

அன்னாரது குடும்பம், மனைவி, பிள்ளைகள் அவர் போற்ற மேன்மையான குணத்துடனும் உடுக்கை இழந்தவன் கை போன்று இடுக்கண் களைவதாம் நட்பு' என்ற குறளுக்கு அமைவாக உதவி புரிந்து வாழ்ந்து வருகின்றார்கள்.

அமரர் ஈகையில் இறைவன் இருக்கிறான் என்றதற்கமைய அமரரது குடும்பத்தினரும் ஈகையில் மிகுந்த ஈடுபாடு உடைய வர்களாக வாழ்ந்து வருகிறார்கள். அன்னார் வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்ற குறளுக்கமைவாக வாழ்ந்து இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னாரது இழப்பை எவராலும் நிரப்ப முடியாது. அப் பெரியார் போன்ற ஒருவரை மீளக் காணபது அரிதாகவே இருக்கும். அன்னாரது பேரிழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்வதோடு நாமும் அதில் பங்கெடுத்துக்கொள்கின்றோம். அன்னாரதுஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை நானும் எனது குடும்பமும் இறஞ்சி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இவ்வண்ணம்**
**திரு.திருமதி கலையரசன்**
**குடும்பத்தினர்.**
**(காவல்துறை நடுவப்பணியகம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டணத்துப் பிள்ளையார் அருளிய
# உடற்கூற்று வண்ணம்

ஒருமட மாது மொருவனுமாகி
　　இன்ப சுகந்தரு மன்பு பொருந்தி
புணர்வு கலங்கி வொழுகிய விந்து
　　வூறு சுரோணித மீது கலந்து

பனியிலொர் பாதி சிறுதுளி மாது
　　பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும வரும்பு கமட மிதென்று
　　பார்வை மெய்வாய்செவி கால்கை யென்ற

உருவமு மாகி யுயிர்வளர் மாத
　　மொன்பது மொன்று நிறைந்து மடந்தை
யுதர மகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமு நாளு மறிந்து

மகளிர்கள் சேனைதரவணை யாடை
　　மண்படி வந்தியுதைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை யமுத மருந்தி
　　யோரறி வீரறி வாகி வளர்ந்து

ஒளி நகை யுற லிதழ்மட வாரு
　　முவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியிலிருந்து மழலை மொழிந்து
　　வாவிரு போவென நாமம் விளம்ப

உடைமணி யாடை யரைவட மாட
　　உண்பவர் தின்பவர் தங்களொண்டு
தெருவில் இருந்து புழுதி யளைந்து பாலரொ டோடி நடந்து
　　அஞ்சு வயதாகி விளையாடியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தரு ஞான குருவுப தேச
முத்தமிழின் கலையுங் கரைகண்டு
வளர்பிறை யென்று பலரும் விளம்ப
வாழ்பதி னாறு பிராயமும் வந்து

மயிர்முடி கோதி யறுபத நீல
வண்டிமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொ னிலங்கும் பணிக ளணிந்து
மாகதர் போகதர் கூடி வணங்க

மதன சொருப னிவனென மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய வெறிந்து
மாமயி ல் போலவர் போவது கண்டு

மனது பொறாம லவர்பிற கோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவ மயங்கி யிதழமு துண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கி

ஒரு முதலாகி முதுபொருளாக
இருந்த தனங்களும் வம்பி லிழந்து
மதன சுகந்த விதன மிதென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து

வளமையும் மாறி இளமையும் மாறி
வன்பல் விழுந்திரு கண்களிருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து வாத விரோத குரோத மடைந்து
செங்கையி னில்ஓர் தடியு மாகியே

வருவது போல தொருமுது கூனும்
மந்தி யெனும்படி குந்தி நடந்து
மதியு மழிந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல் விடாமல் மொழிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயில்வரு நேர மிருமல் பொறாது
தொண்டையு நெஞ்சு முலர்ந்து வறண்டு
துகிலு மிழுந்து கணையு மழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு

கவியுக மீதி லிவர்மரி யாதை
கண்டிடு மென்பவர் சஞ்சல மிஞ்ச
கலகல வென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து

தெளிவு மிராம லுரைதடு மாறி
சிந்தையு நெஞ்சு முலைந்து மருண்டு
திடமு முலைந்து மிகவு மலைந்து
தேறி நாலதர வேதென நொந்து

மறையவன் வேத னெழுதிய வாறு
வந்தது கண்டமு மென்று தெளிந்து
இனியென கண்ட மினினெய தொந்த
மேதினி வாழ்வு நிலாதினி நின்ற
கடன்முறை பேசு னெழுதிய வாறு
றங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவிழி கஞ்சி யொழுகிட வைந்து பூதமு நாலு சுவாசமு நின்று
நெஞ்சு தடுமாறி வருநேரமே.

வளர்பிறை போல வெயிறு முரோம
முஞ்சடையும் சிறுகுஞ்சியும் விஞ்ச
மனது மிருண்ட வடிவு மிலங்க
மாமலை போல்மய தூதர்கள் வந்து

வலைகொடு வீசி யுயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியி விழுந்த மனைவி புலம்ப
மாழ்கின ரேயிவர் கால சறிந்து
பழையவர் காணு மெனுமய லாவர்கள்
பஞ்சு பறந்திட நின்றவர் பந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடுமென வந்து பறையிட முந்த
    வேபிணம் வேக விசாரியு மென்று

வரிசை கெடாம லெடுமென வோடி
    வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை யடைந்து
    மானிட வாழ்வென வாழ்வென நொந்து

விறகிட மூடி யழல்கொடு போட
    வெந்து விழுந்து முறிந்த நிணங்க
ளுருகி யெலும்பு கருகி யடங்கி யோர்பிடி நீறு மிலாத வுடம்பை
    நம்புமடி யேனை யினியாளுமே.

கட்டி யணைத்திடும் பெண்டீரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டி முறிக்கு மரம் போற் சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டி முழுங்கி யழுவார் மயானங் குறுகியப்பா
லெட்டியடி வைப்பரோ விறைவா கச்சி யேகம்பனே.

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை பிறந்துமண்மே
லிறக்கும் பொழுது கொடுபோவ தில்லை யிடைநடுவிற்
குறிக்குமிஞ் செல்வம் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குமாமருக்கென் சொல்லுவேன் கச்சி யேகம்பனே.

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
    வப்ப னெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
    பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னம் யெத்தனை யெத்தனை செம்மமோ
    மூட னாயடி யேனு மறிந்திலே
னின்ன மெத்தனை யெத்தனை சென்மமோ
    வென்செய்வேன் கச்சி யேகம்ப நாதனே.
முடிசார்ந்த மன்னரு மற்றுள் ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லால் பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் யேயறிவாரில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம் நல்தீபம் வைமின்
சத்தியும் சோமி யும்பார் மகளும்
நாமக ளோடு பல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரி யும்பார்ப் பதியுங்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யாறனம் மானைப் பாடி
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே 1

பூவியல் வார்சடை எம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறம் நிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும் வந்தெம்மை யாளச்
செம் பொன் செய் சுண்ணம் இடித்தும் நாமே 2

சுந்தர நீறணிந்தும் மெழுகித்
தூய பொன் சிந்தி நிதிப ரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடி யெடுமின்
அந்தரர் கோன் அயன் தன் பெருமான்
ஆழியான் நாதன் நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யான் கொழுநற்
கேய்ந்த பொற் சுண்ணம் இடித்தும் நாமே 3

காசணி மின்கள் உலக்கை யெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடும் கச்சித்
திருவேகம் பன் செம் பொற் கோயில் பாடிப்
பாச வினையப் பறித்து நின்று
பாடிப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே 4

அறு கெடுப் பாரய னுமரியும்
அன்றி மற்றிந்திர னோடமரர்
நறு முறு தேவர் கணங்க ளெல்லாம்
நம்மிற் பின் பல் தெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்த வில்லி
திருவேகம் பன் செம்பொற் கோயில் பாடி
முறுவற் செவ் வாயினீர் முக் ணப்பற்க்
காடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 5

உலக்கை பல வோச்சு வர் பெரியர்
உலகமெ லாமுரல் பேதாதென்றே
கலக் அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதா தென்றே
நலக்க அடி யோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 6

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தெண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்லடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்குக்
காடக மாமலை அன்ன கோவுக்
காடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்

வரிவளை ஆர்ப்பவன் கொங்கை பொங்கத்

தோட்டிரு முண்டந் துதைந்தி லங்கச்

சோத் தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி

நாட் கொண்ட நாண் மலர்ப் பாதங் காட்டி

நாயிற் கடைப்பட்ட நம்மை இம்மை

ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி

ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே. 8

வையகம் எல்லாம் உரல தாக

மாமேரு என்னும் உலக்கை நாட்டி

மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி

மேதகு தென்னன் பெருந்து றையான்

செய்ய திருவடி பாடிப் பாடிச்

செம் பொன் உலக்கை வலக்கை பற்றி

ஐயன் அணிதில்லை வாண னுக்கே

ஆடற் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட

மொய்குழல் வண்டினம் ஆடஆடச்

சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்

செங்கயற் கண்பனி ஆடஆடச்

பித்தெம் பிரானொடும் ஆடஆடப்

பிறவி பிறரொடும் ஆடஆட

அத்தன் கருணையொ டாடஆட

ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்து மூலிகை

| தமிழ் | பயன்படும்பாகம் | பயன்படும் நோய் பிறவிசேடபயன் |
|---|---|---|
| அகத்தி | இலை, பூ, பிஞ்சு | பூச்சி, பித்தம் |
| அகில் | வைரம் | குரற்கம்மல் |
| அக்கர காரம் | வேர் | பற்கொதி |
| அரத்தை | வேர்த்தண்டு | ஆஸ்த்மா, இருமல் |
| ஆகாச கருடன் | வேர் | பாம்புக்கடி |
| ஆமணக்கு | வித்து, வேர், நெய் | சுரம் கண்ணோய் |
| ஆரைக்கீரை | தாவரம் | நீரிழிவு, பெரும்பாடு |
| இஞ்சி | வேர்த்துண்டு | வயிற்றுப் பொருமல் |
| இத்தி | கனி | ஈரல்நோய் |
| இலாமிச்சம் | வேர் | பித்தசுரம் |
| எருக்கு | வேர், இலை, பால் | தோல்வியாதி |
| எலுமிச்சை | காய், பழம் | பித்தம், காது |
| ஓரிலைத்தாமரை | இலை, குருத்து | தலைக்குளிர்ச்சி |
| அகில் | வைரம் | குரற்கம்மல் |
| அசோகம் | பட்டை, பூ | பெரும்பாடு |
| அதிமறிச்சம் | வித்து, நெய் | குஷ்டம் |
| அதிவிடயம் | வேர் | சுரம், அதிசாரம் |
| உழுந்து | விதை | உடல்மெலிவு. |
| கடம்பு | வேர், பட்டை | புண், கபம் |
| கடலழிஞ்சில் | பட்டை | நீரிழிவு |
| கடுகு | விதை, நெய் | காது, மூக்குநோய் |
| கடுக்காய் | கனி | அனேகநோய்கள் |
| கறிவேம்பு | இலை, வேர், பட்டை | வாந்தி, பூச்சி. கிறாணி |
| கற்றாழை | இலை | மூலம், தலைநோய் |
| காஞ்சோன்றி | வேர் | சுரங்கள்,கபாலக்குத்து |
| கஸ்தூரிமஞ்சள் | கிழங்கு | தோல்வியாதிகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து எமது நல்வாழ்விற்கு வித்திட்டு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் உயிர் காப்பதற்காக போராடிய கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்களுக்கும்,யாழ்ப்பான போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்களுக்கும், கொழும்பு தேசிய வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்களுக்கும், கொழும்பில் எமக்கு பல வழிகளிலும் தோளோடு தோள் கொடுத்து உதவிய சுன்னாகம் திரு.திருமதி சிவஞானம் குடும்பத்தினருக்கும், திரு. திருமதி. சிவலிங்கம் குடும்பத்தினருக்கும் கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு அன்னாரது பூதவுடல் எடுத்து வரும் வரை எம்முடனே இருந்த திரு. திருமதி Dr. வேலாயுதபிள்ளை குடும்பத்தினருக்கும் மரணச் செய்தி கேட்டு உள்ளூரில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும், தொலைபேசி, தந்தி, தொலைநகல் மூலம் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், அன்னாரது இறுதிக் கிரியைகளின் போது நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள், ஜேர்மனியில் உள்ள மகன் வீட்டிலும், பிரான்சில் உள்ள மகள் வீட்டிலும் இடம் பெற்ற துக்கதினத்திலும் கலந்து கொண்டு ஆத்மா சாந்தி பிரார்த்தனையிலும், இன்று அன்னாரது வீட்டில் நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு பற்றியவர்களுக்கும், எமது இணைபிரியா அயலவர்களுக்கும், உறவுகளுக்கும், இம்மலரை அச்சிட்டு வெளியிட்ட சிமாட் ஸ்தாபனத்தினருக்கும் எமது மனப் பூர்வமான நன்றிகளைத் தெரிவித்து இதை சமர்ப்பணம் செய்கின்றோம்.

நன்றி

**இவ்வண்ணம்**
**மனைவி, பிள்ளைகள்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்."
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

சிவா பிறிண்டேர்ஸ், 7/7, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org